# தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம்

ஏ. எஸ். பாலசிங்கம்

தொழிலாளர் பாதை

வெளியீடு

முதலாம் பதிப்பு - பெப்ரவரி, 1960

அச்சகம்:

லக்ஷ்மன் பிரிண்டர்ஸ்,
219, ஹல்ஸ்டோப் வீதி,
கொழும்பு-12.

தமிழ் தேசிய விடுதலைப் போராளிகளில் ஒருவரான ஏ. எஸ். பாலசிங்கம் அவர்களால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட பிரசுரத்தின் தமிழாக்கமே இச் சிறு நூல். தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் வரலாறு, பிரச்சினைகள், புரட்சிகர மார்க்சிஸ்டுகளின் மூல உபாயம் என்பனவற்றை இதில் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

வட மாகாணத்தில் அவசரகால நிலை அமுலில் இருந்த சமயம் இக்கட்டுரை 'தொழிலாளர் பாதை'யில் வெளிவந்து கொண்டிருந்ததோடு அதை புத்தக வடிவில் வெளிக் கொணர்வதற்கான ஆயத்தங்களும் நடைபெற்றுவந்தன. இதனால் தணிக்கை அதிகாரியின் வெட்டுக்களுடனேயே இந்நூலின் பெரும் பகுதி அச்சேற நேரிட்டது. இக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, தணிக்கைக்குள்ளான இக்கட்டுரையின் பகுதிகளை இங்கு மீண்டும் தந்துள்ளோம். அவற்றை உரிய இடத்தில் சேர்த்து வாசிப்பதில் வாசகர்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்களுக்காக வருந்துகின்றோம்.

10 - 2 - 1980 — பதிப்பகத்தார்

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்



# தணிக்கை

## அவசர காலநிலை அமுலில் இருந்த சமயம் தணிக்கைக்குள்ளான இவற்றினை உரிய இடத்தில் சேர்த்து வாசிக்கவும்

பக்கம் பந்தி வரி
13 2 5

ஆரம்பமாகியது இன்று பூரண அதிகாரம் கொண்ட சர்வாதிகாரியாக விளங்கும் ஜே. ஆர். ஜயவர்த்தனாவே இதனை வகுத்தார்.

பக்கம் பந்தி வரி
13 2 15

ஒரு துண்டு நிலத்துக்கும் வழியில்லாமல் பல்லாயிரம் தமிழ் விவசாயிகள் வாடுகின்றார்கள். இவை தமிழ் மக்கள் மத்தியில் விரக்தியையும், வேதனையையும் பகைமையையும் வளர்த்தன, இந்த விதத்தில் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் கிழக்கு மாகாணமேயாகும். திட்டமிட்ட குடியேற்றத்தினால், இங்கு இரண்டு புதிய பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகள் உருவாகி உள்ளன. அதோடு தமிழ் பேசும் இஸ்லாமியர்களின் நிலம் பெருமளவில் பிடுங்கப்பட்டுள்ளது. இன்றைய முதலாளித்துவ சர்வாதிகார ஆட்சியாளர்கள் உலக மூலதனத்தின் உதவியுடன் மகாவலி கங்கைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இதன் நோக்கம் வடமாகாணத்தினுள் ஊடுருவுவதும் ஆக்கிரமிப்பு இராணுவம் ஒன்றை அங்கே இருத்துவதுமாகும். இந்த நிலங்களின் 'பாதுகாப்புக்காக' 1,50,000 இளைஞர் படையொன்றைத் திரட்டிப் பயிற்சியளித்து இந்த அபிவிருத்தித்திட்டங்களில் குடியேற்றப் போவதாக அரசாங்கம் இவ்வாண்டு யூலையில் அறிவித்தது. இந்த அறிவித்தலைத் தொடர்ந்து தமிழர்களின் அச்சம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

தெற்கில் உள்ள வளமான பரந்த நிலங்களின் அபிவிருத்தி பற்றிக் கவனம் செலுத்தாமல் தமிழ்ப் பிரதேசங்களில் இடைவிடாது இடம் பெற்றுவரும் இந்தத் திட்டமிட்ட குடியேற்றக் கொள்கைகள், தாம் எத்தகைய படுமோசமான ஒடுக்குமுறைக்குப் பலியாகிக் கொண்டுள்ளோம் என்பதைத் தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக பதட்-

நிலையில் உள்ள சில குடியேற்றத் திட்டங்களில் இனக் கலவரங்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. இவை தமிழர்களின் உயிர்களையும், உடைமைகளையும் பலிகொண்டு வருவதோடு, உயிர் வாழ்வுக்கான போராட்ட அவசியத்தையும் அவசரத்தையும் பற்றிய விழிப்புணர்ச்சியையும் உண்டு பண்ணியுள்ளது.

---

பக்கம் பந்தி வரி
16 3 15

இந்த ஒப்பந்தம் சிங்கள மக்களிடையே சந்தேகத்தையும் கொதிப்பையும் உண்டு பண்ணியது. இந்தக் கொதிப்பான சூழ்நிலையை அன்று தனக்குச் சாதகமாக்கிக் கொண்டவர் இன்றைய 'பிரஸிடன்ட்' ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவே அன்றி வேறு யாரும் அல்லர். இந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு கோரிய அவர், பௌத்த பிக்குகளின் ஆதரவுடன் கண்டி யாத்திரையை நடத்தினார்.

பக்கம் பந்தி வரி
21 1 8

இந்த முரண்பாடுகளின் தாக்கம் பொதுத் தேர்தலையடுத்து திட்டவட்டமான உருவில் தலை நீட்டியது. இனவாதக் கொதிப்பின் திடீர் வெடிப்பினால் தமிழர்கள் முன்னென்றுமே இல்லாத அளவில் வன்முறைச் சம்பவங்களுக்கு ஆளாகினர். இதைத் தொடர்ந்து இளம் தமிழ்ப் போராளிகள் அரசின் பொலிசாருக்கு எதிரான ஆயுதம் தாங்கிய பயங்கரவாத நடவடிக்கைகளில் இறங்கினர்.

தீவு பூராவும் இடம் பெற்ற இந்த அனர்த்தத்தினால் நூற்றுக் கணக்கான தமிழர்கள் இரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடைமைகளும் நாசமாக்கப்பட்டன. அத்தோடு ஆயிரக் கணக்கானோர் அகதிகளாகினர். காலிக் குண்டர்களின் கொலை, கொள்ளை, கற்பழிப்புச் சம்பவங்களில் அரசின் பொலிசார் வெளி வெளியாகவே கலந்து கொண்டனர். பொதுஜன பந்தோபஸ்தின் பாதுகாவலர்களின் ஆசீர்வாதங்களோடு படு கொடூரமான முறையில் பரவி வந்த இக் கலவரங்களை கட்டுப்பாட்டுக்குள் கொணர்வதற்கு பதிலாக, அரசாங்கம் இனவாதச் சாயம் கொண்ட அறிக்கைகளை வெளியிட்டது. இது எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பதாக இருந்தது.

பக்கம் பந்தி வரி
21 3 10

இளைஞர்கள், இந்தத் தேசிய ஒடுக்கு முறையின் முரண்பாடுகளாலும், பொலிசாரின் இடைவிடாத கொடுமைகளாலும் உருவான ஒரு புரட்சிகர நிலைமையுள் அகப்பட்டுப் போயினர். இதனால் அவர்கள் காந்திய 'அஹிம்சை' கோட்பாடுகளை கைவிடும்

வகையில் நிர்ப்பந்திக்கப்பட்டன. இவை புரட்சிகர அரசியலுடன் ஒத்துப் போகாததைக் கண்ட இளைஞர்கள் வன்முறை பயங்கரவாத வழியைத் தேர்ந்தெடுத்தனர்.

போராட்டத்தை வழிநடாத்திச் செல்வதற்கு புரட்சிகர அரசியல் கோட்பாடு, நடைமுறை என்பன இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனபூர்வமான ஒரு தேசிய விடுதலை இயக்கம் இல்லாததால் ஏற்பட்ட அரசியல் இடைவெளி, தமிழ் அரசியலில் பயங்கரவாதத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. இந்த வெறுமையும், திட்டவட்டமான செயற்பாட்டின் அவசியமும் இளைஞர்களை பயங்கரவாத அரசியலில் தீவிரப் போக்கைக் கடைப்பிடிக்கத் தூண்டியது. பயங்கரவாதத் தாக்குதல்கள் தப்புத் தவறான வன்செயல் நடவடிக்கைகளாகவன்றியும் அவதானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளைக் கொண்டிருந்தன. முக்கியமாக இத்தாக்குதல்கள், இளைஞர்களைச் சித்திரவதை செய்வதில் பேர் போன உயர்தர பொலிஸ் அதிகாரிகளுக்கும், தமிழரின் நலன்களைக் காட்டிக்கொடுத்த தமிழ் அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராக அமைந்திருந்தன.

| பக்கம் | பந்தி | வரி |
|---|---|---|
| 32 | 1 | 25 |

நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல பிரிந்து சென்று தமக்கெனத் தனியான ஒரு அரசினை அமைத்துக் கொள்வது என்ற தமிழர்களின் தீர்மானத்திற்குக் காரணம், சகிக்க முடியாத தேசிய ஒடுக்கு முறையின் வரலாற்று நிலைமைகளே ஆகும். இந்த நான்குவித ஒடுக்கு முறையின் கூட்டு விளைவுகள் கூட்டு வாழ்க்கையைச் சகிக்க முடியாதனவாக்கின. தேசிய பிளவில் இருந்து ஏற்பட்ட முரண்பாடுகள், ஒரு அரசியல் வெடிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதனவாக்கின. இரண்டுபட்ட அரசியல் தனிமைப்படுத்தலுக்கும், பொருளாதார இழப்புக்களுக்கும் இன அடையாளங்களை ஒழித்துக் கட்டும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளான ஈழத் தமிழ்ப் பேசும் மக்கள், பிரிந்து செல்வதை விட வேறு மாற்று வழிகளைக் கொண்டிருக்கவில்லை. தேசிய ஒடுக்கு முறையின் உச்சக் கட்டத்திலேயே பிரிந்து சென்று அரசியல் சுதந்திரத்தைப் பெறுவது என்ற தீர்மானம் சரியானது மட்டுமன்றி ஒரு புரட்சிகர நடவடிக்கையுமாகும். அது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் வர்க்கப் போராட்டத்தையும் முன்னேறச் செய்யும்.

| பக்கம் | பந்தி | வரி |
|---|---|---|
| 32 | 2 | 20 |

லெனின் முன்னோக்கின்படி, ஒடுக்கும் தேசிய இனத்தில் இருந்து பிரிந்து செல்வது என்ற ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின்

முடியு அத்தியாவசியமானது; அத்தோடு வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாததாகும் என தாராளமாகக் குறிப்பிடலாம். ஏனெனில் இரத்தப் பத்திரத்தின் முதல் பாகத்தில் நாம் சுட்டிக் காட்டிய அளவிற்கு ஒடுக்கு முறையின் தன்மையும், வடிவமும் தீவிரமடைந்துள்ளன இந்நிலையில். அரசியல் சுதந்திரத்திற்கான தமிழ் மக்களின் போராட்டம், ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் இரண்டினதும் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு சேவை செய்கின்றதா என்ற கேள்வி எழுப்பப்படலாம்.

பக்கம் பந்தி வரி

32 புரட்சிகர மார்க்சிஸ்டு

கனின் பாகம் — ஆரம்பம்

30 வருடங்களாக சிங்கள தேசிய இனம் கட்டவிழ்த்துவிட்ட தேசிய ஒடுக்கு முறையானது, ஈழ தமிழ் மக்களை நிலமானித்துவ உறக்கத்தில் இருந்து தட்டி எழுப்பியதோடு. தேசிய விடுதலைக்குப் போராடும் ஒரு தேசிய இயக்கத்தின் உள்ளும் ஈர்த்தது.

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

முதலாம் பாகம்:

# தேசிய ஒடுக்குமுறையின் வரலாறும் பிரிந்து செல்லும் முடிவும்

இன்று உலகில் தேசிய விடுதலை இயக்கங்கள் பல முனைகளில் போராடி வருகின்றன. ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் சர்வாதிகார கொடுங் கோன்மையை எதிர்த்தும், நவகாலனித்துவத்தை எதிர்த்தும் தேசிய இனவெறியை எதிர்த்தும் இன்னும் பல ஒடுக்கு முறை வடிவங்களை எதிர்த்தும் ஒடுக்கப்படும் மக்களும், தேசிய இனங்களும் போராடி வருகின்றார்கள் இந்தப் புரட்சிகரப் போராட்டங்கள் ஒவ்வொன்றும் தமக்கேயுரித்தான வரலாற்றுச் சிறப்பம்சங்களையும், ஸ்திரமான தனி நிலைமைகளையும், கொண்டுள்ளன. இந்த விடுதலை போராட்டங்கள் ஒவ்வொன்றினதும் மூலோபாயம், அமைப்பு, தத்துவம் என்பவற்றை இவையே நிர்ணயம் செய்கின்றன. இந்த விடுதலைப் போராட்டங்களின் தனிச் சிறப்பு அம்சங்களினுள் சோசலிச புரட்சிகரக் கோட்பாட்டின் உலகளாவிய வரலாற்றுக் கொள்கை அடங்கி உள்ளது, இது ஒடுக்கப்படும் மக்கள் புரட்சிகரச் சக்தி கொண்டவர்கள்; அவர்கள் தான் வரலாற்றுச் சக்தி; வரலாற்றை சிருஷ்டிப்பவர்களும், உலகை மாற்றி அமைப்பவர்களும் அவர்களே என்கிறது.

இந்த சமுதாய அபிவிருத்தியினதும் பரிணாமத்தினதும் வரலாற்று சட்ட நியதிக்குள், எந்தவொரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் தேசிய விடுதலைப் போராட்டமானது ஜனநாயக போராட்டத்தினதும், பாட்டாளி வர்க்கப் புரட்சியினதும் அரங்கில் தனது குரலை எழுப்புமயின் அது முற்போக்கானது என மார்க்சிச – லெனினிச தத்துவார்த்த அரசியல் வடிவம் அங்கீகரிக்கின்றது.

லெனினின் வகுப்பின்படி, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, நடைமுறைச் சாத்தியமான ஒரு புரட்சிகரக் கோட்பாடாகும். இக்கோட்பாடு ஒரு தேசிய இனமானது பிரிந்து சென்று தனக்கென தனி ஒரு அரசை அமைக்க உள்ள உலகளாவிய சோசலிச கொள்கையை உத்தரவாதம் செய்கின்றது. இக்கொள்கை, ஒரு பேரினத்தின் தேசிய வெறியில் இருந்து உருவாகும் ஒடுக்குமுறையில் நின்று சிறிய தேசிய இனத்தை காப்பாற்றுவதை தனது இலக்காகக் கொண்டுள்ளது. இக்கொள்கை ஒரு தேசிய இனத்தின் கலாச்சார, இன அடையாளங்களை பேணுவதற்கென்று வகுக்கப்பட்டதாகும். இக்கொள்கை உண்மையுடனும், நேர்மையுடனும் கடைப்பிடிக்கப்பட்டு வருமிடத்திலேதான் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு அவ

சியமான அக, புற நிலைமைகளை சிருஷ்டிக்க முடியும்.

இலங்கை தமிழ் தேசிய பிரச்சினை, அந்தத் தேசிய இனத்திற்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே இயக்கம் நடாத்தி வருகின்றது. கடந்த 30 வருடங்களாக ஈழ தமிழ் தேசிய இனம் கொடிய ஒடுக்கு முறைக்கு உள்ளாகி வந்தது. ஒரு சிறிய தேசிய இனத்திற்கு எதிராக தூண்டப்பட்ட ஒரு பேரினத்தின் - சிங்கள தேசிய இனத்தின் தேசிய இனவெறியின் கொடிய ஒடுக்கு முறை வடிவமாக இது விளங்கியது. இந்தச் சிங்கள தேசிய இனத்தின் ஆளும் கும்பல், தமிழ்ப் பேசும் மக்களின் இனம் சங்களையே அழித்தொழிக்கும் நாசகாரக் கொள்கையைக் கடைப்பிடித்துவந்ததோடு அவர்களின் உயிர் வாழ்வையே ஆபத்தக்குள்ளாக்கியது. அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டமைக்கு எதிராக இடம்பெற்று வந்த நீண்டகாலப் போராட்டம், மிலேச்சமான ஒடுக்கு முறைகளை எதிர்நோக்கியதோடு வரலாற்றுப் போக்கின் உச்சக் கட்டத்தில் தேசிய பிளவு மோசமடைந்தது. இந்நிலையில் கூட்டு வாழ்வில் புரட்சிகர வெடிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாததொரு மாற்றீடாகியது.

இலங்கை ஆளும் வர்க்கம், வெளியுலகத்திற்கு இந்நாட்டை ஒரு சாந்தமான தீவாகவும், புத்தரின் சமாதானமும், தாமமும் இங்கு செழித்து வளர்வதாகவும், தீங்கற்ற கூட்டுச்சேரா அரசியல் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதாகவும் காட்டுகின்றது.

இந்த மாயாஜாலங்களின் பின்னணியில் - இதற்கு நேர் எதிர்மாறான அப்பட்டமான உண்மை ஒன்றுண்டு. அது தேசிய ஒடுக்குமுறை, அடிப்படை மனித உரிமைகள் மீறல், இன ரீதியான அநியாயங்கள், திட்டமிட்ட இன ஒழிப்பு என்பவற்றின் ஐதார்த்தமாகும். சுதந்திரம் கிடைத்ததில் இருந்து சிங்கள ஆளும் வர்க்கம், ஜனநாயகம், சோசலிசம் என்ற கோஷங்களின் பின்னணியில் முதலாளித்துவ சுரண்டல் சாதனங்களை சாதுரியமாகக் கையாண்டு தனது ஆட்சியை பலப்படுத்தி வந்தது. இதன் பொருட்டு அருவருப்பூட்டும் தேசிய வகுப்புவாத மத வெறி சித்தாந்தங்களை துணைக்கொண்டது. இந்தச் சித்தாந்த சாதனங்களை உபயோகிப்பதன் மூலமும் திட்டமிட்ட தேசிய ஒடுக்குமுறைக் கொள்கைகளை கடைப்பிடிப்பதன் மூலமும், ஆளும் முதலாளித்துவ வர்க்கம், ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளிகள் மீது மேலாதிக்கம் செலுத்த முடிந்தது.

மறுபுறத்தில் இந்த சிங்கள முதலாளித்துவ தேசிய வாதமானது பல்வேறு முரண்பட்ட பகுதியினரைக் கொண்ட ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்

க. குணேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்



தின் துருவப்படுத்தலுக்கும் உதவியுள்ளது. விவசாயிகள் பாட்டாளி வர்க்கம், குட்டி முதலாளித்துவ வர்க்கம் ஆகிய வர்க்கப் பகுதிகளையும், பல்வேறு தட்டுச் சாதிகளையும் இதன் மூலம் ஒரு வெகுஜன தேசிய விடுதலை இயக்கமாக்கியுள்ளது. இந்த இயக்கத்தின் நிலைமையில் தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமை இன்றுள்ளது.

ஜனநாயகப் போராட்டமானது அதன் அம்சங்களில் முற்போக்கானது என்றபடியாலும், ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டமானது அதன் பண்பில் புரட்சிகரமானது என்றபடியாலும், பாட்டாளி வர்க்கப் புரட்சியாளனின் பணி அப்போராட்டத்தை ஆதரிப்பதாகும். போராட்டம் முதலாளித்துவ வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்ட பொழுதும், போராட்டத்தைத் தேசிய விடுதலைக்கும், சோசலிசப் புரட்சிக்கும் முன்னிட்டுச் செல்ல வேண்டிய மூல உபாயத்தைப் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளன் கடைப்பிடிக்கிறான்.

தேசிய பிரச்சனை சம்பந்தமாக லெனின் வகுத்துள்ள கொள்கை தெட்டத் தெளிவான வர்க்கப் போராட்ட மூல உபாயத்தைத் தந்துள்ளது. இதன்படி, ஒடுக்கும் தேசிய இனத்தினதும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் முதலாளித்துவ வர்க்கங்கள் ஒன்றுடன் ஒன்று கூட்டாகச் செயற்படுவதைக் குலைப்பது, ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளிவர்க்க நலனின் அடிவிருத்தியைப் பலப்படுத்துதல், பாட்டாளி வர்க்கத்தை விவசாயிகளினதும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினதும் கூட்டின் மூலம் பலப்படுத்துதல், ஒடுக்கும் முதலாளித்துவ அரசுக்கு எதிராகப் போராடப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தலைமையை நிலைநாட்டல் என்பன புரட்சிகர மார்க்சிஸ்டின் பணிகளாகும்.

இப்படியான தத்துவார்த்த, அரசியல் மூல உபாயத்தினுள் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான குரல் எழுப்பப்பட வேண்டும் என்று நாம் வாதிடுகின்றோம். இது எமது ஜனநாயகப் போராட்டத்தைத் தேசிய விடுதலை நோக்கியும், சோஷலிசப் புரட்சி நோக்கியும் முன் எடுத்துச் செல்லும் என்று நாம் நம்புகின்றோம்.

எமது போராட்டத்தைப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அரங்கில் நிலைநாட்டி, எமது சுய நிர்ணய உரிமையை, அதாவது பிரிந்து சென்று சுயாதீனமான அரசு ஒன்றை அமைக்கும் உரிமையை ஒடுக்கும் தேசிய இனத்தின் நனவான பாட்டாளி வர்க்கத்தின் நேச சக்திகள் நாமே என்று பிரகடனம் செய்ய விரும்புகின்றோம். ஒடுக்கும் முதலாளித்துவ அரசு அமைப்பாகிய பொது எதிரிக்கு எதிரான எமது போராட்டத்திற்கு நிபந்தனையற்றதும் சளையாததுமான ஆதரவைத் தரும்படி நாம் இப்பாட்டாளி வர்க்கத்திடம் கோருகின்றோம்.

# வரலாற்றுப் பின்னணி

இந்தப் பத்திரம், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை உலக சமுதாயத்திற்கும், குறிப்பாக சோஷலிச உலகத்திற்கும், உலக தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் அறிமுகப்படுத்த எடுக்கும் ஒரு முயற்சியாகும். சுருக்கமாக வரலாற்றுப் பின்னணியைத் தருவதன் மூலம் எமது போராட்டத்தின் சமூக, பொருளாதார அரசியல் பரிமாணத்தைத் தந்து, தேசிய விடுதலைக்கான எமது போராட்டம் முற்போக்கானதும் புரட்சிகரமானதுமாகும்; அது மார்க்சிசத்தினதும், லெனினிசத்தினதும் நடைமுறையுடன் ஒத்துப் போகின்றது என்று நாம் வாதிடுகின்றோம்.

இலங்கையில் மார்க்சிச அரசியல் வாதிகள் என்றழைக்கப்படுவோர் தமிழ் தேசிய இனப் பிரச்சனை சம்பந்தமாகச் சுய நிர்ணய கருத்துரு பற்றி முன்வைத்துள்ள புதிரான தப்பு விளக்கங்களினால் தோன்றியுள்ள சில கருத்து முரண்பாட்டிற்குரிய வாதங்களுக்கு இப்பத்திரம் பதிலளிக்க முயற்சிக்கின்றது. இந்தத் தத்துவார்த்த புதிருட்டல்கள் ஸ்தூலமான நிலைமைகளை ஸ்தூலமாக ஆய்வதைப் புறக்கணிக்கின்றன. இவை மாறுவேடம் பூண்ட அரசியல் சந்தர்ப்பவாதமன்றி வேறெதுவுமல்ல என்பதை எம்மால் எடுத்துக்காட்ட முடியும்.

மேல் நாட்டு முதலாளித்துவம் அதன் விரிவுறும் வரலாற்றுக் கட்டத்தில் உலக மேலாதிக்கத்திற்கான அதன் போராட்டத்தின் பொழுது அபிவிருத்தியடையும் உலகம் என்று அழைக்கப்படுவதன் சமூக அமைப்பினுள் ஊடுருவியது இந்த ஊடுருவல் வெவ்வேறு உருவங்களை எடுத்தது இந்த ஊடுருவலின் விளைபயன்கள் பிரமாண்டமான சமூக பொருளாதார அரசியல் பிரச்சனைகளை உருவாக்கியுள்ளன. இவை இந்நாடுகளின் "சுதந்திரத்தின்" பின்னரும் அவற்றைத் தொடர்ந்தும் பீடித்துள்ளன.

இப்படியான காலனித்துவ ஆதிக்கத்திற்குக் கோரமாக இரையாகிய நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் வர்த்தக ஊடுருவலில் இருந்து, பிரித்தானிய ஏகாதிபத்தியம் வரை, 450 வருடங்களுக்கும் மேலாக இலங்கை மிகவும் பிரமாண்டமான சுரண்டலின் வரலாற்றை அனுபவித்தது. இதனால் அது பொருளாதார அடித்தளத்திலும் மேற்கட்டுமான அமைப்புகளிலும், அமைப்பு ரீதியான உருமாற்றங்களை அடைந்தது. மிகவும் மோசமானதும் மிகவும் பாரியதுமான உருமாற்றம்தான் இரு தேசிய இனங்களை தமிழ் சிங்கள இராச்சியங்களைப் பலாத்காரமாக 1833ம் ஆண்டு ஒற்றையாட்சியின் கீழ் ஒருங்கிணைத்ததாகும். இதன் மூலம் இன்றைய தேசிய இன முட்டிமோதலுக்கு அத்திவாரம் இடப்பட்டது.

காலனித்துவ ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாகத் தமிழர்களும், சிங்களவர்களும் திட்டவட்டமாகப் புறம்பான தேசிய இனங்களாகவும், இறைமை உள்ள மக்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். தமிழர்களின் வரலாறு இத்தீவில் சரித்திரத்திற்கு முந்திய காலத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது. முதலாவது சிங்கள மக்கள் கி. மு. 6ம் நூற்றாண்டில் இத்தீவிற்கு வந்தார்கள். அவர்கள், அவர்களது மரபுவழிக் கதையின் அரசகுமாரனாகிய விஜயாவுடன் வட இந்தியாவிலிருந்து வந்த பொழுது திராவிடர்கள் (தமிழர்) இத்தீவில் வாழ்ந்து வந்தார்கள்.

ஆரம்ப குடியிருப்பு பற்றிய பிரச்சினை மரபுவழிக் கதைகளாலும், புராணங்களாலும் சூழப்பட்டிருந்த பொழுதும், மறுக்க முடியாத முறையில் தமிழர்களே முந்திக் குடியேறியவர்கள் என்று நவீன மேதாவிகள் கருதுகின்றார்கள்.

## மகாவம்சம்

தீவின் கொந்தளிப்பான கடந்த காலத்தைச் சிங்கள வரலாற்று நூலாகிய "மகாவம்சம்" கி.மு. 6ம் நூற்றாண்டில் இருந்து பொறித்துள்ளது. அது தமிழ் சிங்கள அரசர்களுக்கு இடையிலான பெரும் யுத்தங்களின் வரலாறுகள், தென் இந்தியத் தமிழ் சாம்ராஜ்யங்களில் இருந்து வந்த ஆக்கிரமிப்புக்கள், தமிழ், சிங்கள இராச்சியங்களுக்கு இடையில் மேலாதிக்கத்திற்காகிய போராட்டங்கள் என்பவற்றைப் பதிவு செய்துள்ளது. சில காலங்களில் இத்தீவானது தமிழ் அரசர்களால் ஆளப்பட்டது. அதன் பின் அது சிங்கள அரசர்களால் ஆளப்பட்டது. இடையிடையே நடந்த இந்த யுத்தங்கள் சிங்கள அரசர்களை அவர்களது இராஜதானியைத் தெற்கு நோக்கி நகர்த்தச் செய்தன.

13ம் நூற்றாண்டில் இருந்து அந்நிய காலனித்துவம் வரும் வரை தமிழர்கள் தேசிய முழுமையுடன் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தமது மரபுத் தாயகத்துள், திட்டவட்டமான நிலப்பரப்பில்; வடக்கு கிழக்கு மாகாணங்களை அரவணைத்த பிரதேசத்துள் தமது இராச்சியங்களுள் தமது மன்னர்களால் ஆளப்பட்டு வந்தார்கள்.

ஒரு முறை மார்க்கோ போலோ இலங்கையை வையகத்தின் சுவர்க்கம் என்று வர்ணித்தார். பிரித்தானியர் அதை 'இந்து சமுத்திரத்தின் முத்து' என்று அழைத்து வந்தனர். இந்தியாவின் கரையிலிருந்து ஆக 22 மைல் தூரக் கடலால் பிரிக்கப்பட்டுள்ள இத்தீவின் பரப்பு 25,332 சதுர மைல்கள் அல்லது இங்கிலாந்தின் அரைப்பங்களவானது.

காலனித்துவ ஊடுருவலுக்கு முன் இத்தீவானது பாரம்பரியமான சுய பூர்த்தியுள்ள பொருளாதாரத்தைக் கொண்டிருந்தது. அது கிழக்கின் தானியக் களஞ்சியம் என்ற பெயரைப் பெற்றிருந்தது. காலனித்துவ

ஆட்சிக்கு முன் நிலவிய உற்பத்தி முறை, ஆசிய முறையின் இற்றுப்போகும் அம்சங்களைக் கொண்ட பிரபுத்துவ முறையாகும்.

தமிழ் தேசிய இனம் பிரபுத்துவ பொருளாதார அமைப்பு முறையினுள் அமைக்கப்பட்டிருந்தது. அது தனித்தன்மையுடைய உற்பத்தி உறவுகளைக் கொண்டிருந்தது அதன் சிறப்பியல்பாக படிநிலை ரீதியான கடமைகளைக்கொண்ட சாதி முறை நிலவி வந்தது.

மத்தியகால இலங்கை வாவிகள், கால்வாய்கள் என்பன கொண்ட வலைப்பின்னல் போன்ற விசாலித்த நீர்ப்பாசன அமைப்பிற்குப் பிரசித்தி பெற்றிருந்தது இவை பின்னர் கைவிடப்பட்டு, இற்று, வட, வட மத்திய மாகாணங்களின் அடர்ந்த காடுகளின் கீழ் மறைய ஆரம்பித்தன இக்கால கட்டத்தில் சிங்களப் பிரபுத்துவ மேற்குடியாட்சியினர் மத்திய மலையகத்திற்கு அகன்று சென்று அங்கு கண்டியைத் தமது இராஜதானியாக்கிக் கொண்டனர்.

போர்த்துக்கேயர் முதன்முறையாக இலங்கைக்குப் பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்திறங்கினர். அப்பொழுது அவர்கள் இரு இராச்சியங்களைக் கண்டனர். வடக்குக், கிழக்கு மாகாணங்களில் தமிழர்களையும், தெற்கில் சிங்களவர்களையும் அவர்கள் கண்டார்கள்.

இரு வேறுபட்ட சமூக அமைப்புக்கள், மொழிகள், கலாச்சாரங்கள் என்பவற்றை இவர்கள் கொண்டிருந்தார்கள் இவர்கள் தம்மை வேறுபட்ட தேசிய இனங்களாகவும், தமது சொந்த அரசர்களால் ஆளப்பட்டவர்களாகவும் இருந்து வந்தார்கள்.

போர்த்துக்கேயர் முதலில் ஒப்பந்தங்களைச் செய்தார்கள், அதன் பின் யுத்தங்களைத் தொடுத்தார்கள், இறுதியில் 1619ம் ஆண்டில் நடந்த யுத்தத்தில் அவர்கள் தமிழ் இராச்சியத்தைக் கைப்பற்றித் தமிழ் அரசனாகிய சங்கிலி குமாரனைத் தூக்கிலிட்டனர்.

ஆயினும் போர்த்துகேயரும் அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தரும் தமிழ் தேசிய இனத்தை வேறான அரசாக ஆண்டு வந்தார்கள். பிரித்தானியரே பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரு தேசிய இனங்களையும் ஒரு அரசின் கீழ் இணைத்து ஒற்றை ஆட்சியின் கீழ் கொணர்ந்தனர்.

## பெருந்தோட்டப் பொருளாதாரம்

அந்நிய முதலாளித்துவ ஊடுருவல் பலவேறு விதமான உருவங்கள், கட்டங்கள் என்பனவற்றைக் கொண்டிருந்தது. இதன் தனித்தன்மை, பல்முகமான அதன் ஊடுருவலின் விளைபயன்கள் என்பவற்றிலிருந்து முரண்பாடுகள் எழுந்தன. இம்முரண்பாடுகள் பொருளாதார அடித்தளத்திலும், மேல் கட்டுமான

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்



அமைப்புக்களிலும் அமைப்பு ரீதியான பரிணாமங்களை ஏற்படுத்தின இலங்கை சமூக அமைப்பில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் இயக்காற்றலை உண்டாக்கின. இவையாவும் எப்படி ஏற்பட்டன என்று விபரமாகவும் வரலாற்று ரீதியாகவும் ஆய்ந்து, ஆதாரமூலமாகக் காண்பித்தல் இக் கட்டுரையின் எல்லைக்கும் அதன் ஆய்வுப் பொருளுக்கும் அப்பாற்பட்டவையாகும்.

இலங்கையில் முதலாளித்துவத்திற்கு முன் இருந்த பொருளாதார அமைப்பினுள் போர்த்துக்கேயரினதும், ஒல்லாந்தரினதும் காலனித்துவ ஆட்சியின் ஊடுருவலின் விளைபயன்களை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலின் விளைபயன்களுடன் ஒப்புநோக்கும் பொழுது மிகவும் அற்பமானவையாக உள்ளன என்று இங்கு கூறுவது போதுமானதாகும்.

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் நிகழ்ந்தது. தீவின் பொருளாதார வாழ்வில் பெரும் அழிவைக் கொணர்ந்தது. தீவின் மரபுவழி சுய பூர்த்தி விவசாயப் பொருளாதாரத்தின் மேல், மேலடுக்காகச் சுரண்டல் பெருந் தோட்டப் பொருளாதாரம் திணிக்கப்பட்டது. இதுவே இச் சம்பவமாகும்.

இந்த மேல் நடுகை தீவின் செழிப்பும், வளமும் மிக்க மலையகத்தைத் தேயிலை, ரப்பர் பெருந்தோட்டங்கள் படர்ந்த பிரதேசமாக்கியது.

இந்த இரட்டைப் பொருளாதாரப் பணியைக் குறைந்த வேதனத்திற்கு வேலை செய்யும் பிரமாண்டமான தொழிலாளர் சேனை ஒன்றைத் தென் இந்தியாவில் திரட்டுவதன் மூலம் பிரித்தானிய ஏகாதிபத்தியம் சாதித்தது. ஒரு புறம் வறுமையாலும், மறுபுறம் பலாத்காரத்தாலும் லட்சக் கணக்கான தமிழ் தொழிலாளர்கள் திரட்டப்பட்டு அவர்களுக்கு சுபீட்சம் அளிக்குமென்று இந்நாட்டிற்கு வந்தார்கள். வந்தவர்கள் திகைக்க வைக்கும் அடிமைத் தொழிலினுள் தள்ளப்பட்டார்கள்.

இப்படி அடிமைப்படுத்தப்பட்ட லட்சக் கணக்கானோரைக் கொண்டு பொருளாதார அமைப்பு தோன்றி கட்டி எழுப்பப்பட்டது இவர்களின் வியர்வையும், இரத்தமும் பிரித்தானிய ஏகாதிபத்திய கழுகுகளின் தணியாப் பேராசையைப் பூர்த்தி செய்தன.

இந்தப்பெருந்தோட்டப் பொருளாதாரமானது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் முதலீடுகள் ஏற்றுமதிச் சந்தை, சக்தி மிக்க கம்பனிகள் என்பன மூலம் விசாலித்தது. உற்பத்தி முறையின் அமைப்பு பரிணாமம் அடைந்தது. பழைய பிரபுத்துவ முறையின் பொருளாதாரத்தை மாற்றி முதலாளித்துவ உற்பத்தி முறையின் அபிவிருத்திக்கு அடிகோலியது. பெருந்தோட்டப் பொருளாதாரம் இங்ஙனம் உற்பத்தி முறையை மாற்றியமைத்

தது ஆயினும் தொழிற் சந்தையானது எவ்வித மாற்றமும் இன்றி இருந்தது.

தமிழ்த் தொழிலாளர்கள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் அவர்களின் சந்ததியினரும் தமது வெள்ளைக்கார எஜமானர்களின் கீழும், இலங்கை முதலாளித்துவத்தின் கீழும் நிரந்தர அடிமைகளாக உழைக்கத் தள்ளப்பட்டார்கள்.

இந்த விதத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் கண்டிச் சிங்களவர்களின் தாயகத்தின் நடுவில் தமிழ் தோட்டப் பாட்டாளி வர்க்கத்தைத் தோற்றுவித்தது. பிரித்து ஆளவும், வர்க்கப் போராட்டத்தைத் தோற்கடிக்கவும், தமிழ் சிங்கள முரண்பாடுகளை இதன் மூலம் மிகவும் சூட்சகமாகக் கையாண்டு வந்தது.

## ஆங்கிலேயரும் தமிழ் ஈழத் தேசிய இனமும்

தமிழ் தேசிய இனம் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தமிழ் பேசும் தொன்முதற் குடி மக்களைக் கொண்டுள்ளது. இவர்களின் மேல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பாதிப்பு பாரிய மாற்றங்களைக் கொண்டுவரும் விளைபயன்களை உண்டு பண்ணியது.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் அரசியல் தளத்தில் மத்தியப் படுத்தப்பட்ட நிறுவனங்களுடன் தனி அரசின் அமைப்புக்களையும் நிறுவியது. இவை தமிழ் அரசின் பிரத்தியேகமான இருப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தன.

இதன் மூலம் இரு தேசிய இனங்களின மக்கள் வரலாற்று ரீதியாக பிரத்தியேகமாக இருந்து வந்தமை புறக்கணிக்கப்பட்டது இரு அரசுகளும் பலாத்காரமாக ஒன்றிணைக்கப்பட்டன. இது பலாத்காரமாக இரு தேசிய இன மக்களையும் ஒன்றிணைத்தது. இவையே தமிழ், சிங்கள முரண்பாடுகளின் அடிப்படைக் காரணங்களாகும்.

ஈழத்தின் தமிழ் சமூக அமைப்பு இறுக்கமான சாதிமுறையைக் கொண்டிருந்தது. படிநிலை அமைப்பின் அடிப்படையில் இதன் கீழ் உழைப்புப் பங்கீட்டு முறை ஏற்படுத்தப் பட்டிருந்தது.

உயர்சாதி இந்துக்கள் செல்வாக்கு, சலுகைகள், அந்தஸ்து ஆகியவற்றை இதன் கீழ் அனுபவித்து வந்தனர். இவர்களுட் சிறுபான்மையினர் (நிலச் சொந்தக்காரர்களும், உயர் வர்த்தகர்களும்) உற்பத்தி சாதனங்களின் உரிமையாளர்களாக இருந்தார்கள். இவர்கள் மற்றவர்களை, குறிப்பாகத் "தீண்டத்தகாதவர்களை" என்றழைக்

கப் படுவோரைச் சரண்டி வந்தார்கள்.

உயர்சாதி இந்துக்கள் சாதி முறையினால் சலுகைகளையும், அந்நிய மதச் சபைகளிடம் இருந்து சிறந்த கல்வி வசதிகளையும் பெற்றார்கள். அவர்கள் ஆங்கில கல்வி முறையைத் தமதாக்கிக் கொண்டார்கள். ஆங்கிலப் படிப்புப் பெற்ற சட்டத்தரணிகள் போன்ற உயர் தொழிலர், எழுதுவினைஞர்கள் போன்ற உத்தியோகஸ்தர்கள் இதனால் தோன்றினர். இவர்கள் நிர்வாக சேவையின் அதிகார அமைப்பின் ஓர் அங்கம் ஆகினர்.

ஆங்கில ஏகாதிபத்திய எஜமானர்கள், தமிழர்களை ஊக்குவித்தனர். அவர்களுக்கு அரச நிர்வாகத்திலும், ஆயுதப் படைகளிலும் பெரும் பங்கைக் கொடுத்தனர்.

இவற்றின் நோக்கம் பெரும்பான்மையினராகிய சிங்களவர்களின் வளர்ச்சியையும், சக்தியையும் கட்டுப்படுத்துவதேயாகும். இதுவே இழிபுகழ் பெற்ற பலத்தைச் சமநிலைப்படுத்தும் மூல உபாயமாகும். இது பின்னர் சிங்கள தேசிய வாதத்தின் தீயைப் பற்றச் செய்தது.

தமிழர்கள் இலங்கையின் வறண்ட பிரதேசத்தின் வளம் குன்றிய, அபிவிருத்தியடையாத பகுதிகளில் குடியேறியிருந்தனர். விவசாயமும், கைத்தொழிலும் அபிவிருத்தியடைவதற்கு இங்கு சாத்தியக்கூறுகள் குறைவு. அதனால் தமிழர்கள் ஆங்கிலக் கல்வியில் அக்கறை காட்டுபவர்களாகவும், அமர்ந்த வண்ணம் தொழில் புரியும் உத்தியோகங்களை எதிர்பார்ப்பவர்களாகவும் இருந்து வந்தார்கள்.

## சிங்களத் தேசியவாதம்

தமிழர்களின் ஆதிக்கம் அரச நிர்வாக அமைப்பிலும், அதே போலப் பெருந்தோட்டத் துறையிலும் நிலவியது. ஆங்கிலம் கற்றவர்கள் சலுகைகள் பெற்ற உயர்ந்தோர் குழாத்தவரானார்கள். கிறிஸ்தவ சமயம் தொடர்ந்து பரவி வந்தது. இவை சிங்களத் தேசிய வாதம் தோன்றுவதற்குக் காரணிகளாக இருந்தன.

தேசியவாதப் போக்குகள் அவற்றின் ஆரம்ப கட்டங்களில் பௌத்த சமயத்திற்குப் புத்துயிர் கொடுக்கும் இயக்கங்களின் உருவத்தை எடுத்தன. இவை அரசியலில் படிப்படியாகச் சக்திமிக்க செல்வாக்கைப் பெற்றன. பௌத்தமத மறுமலர்ச்சி என்னும் கோஷங்களின் கீழ் தேசிய வகுப்புவாதச் சித்தாந்தம் தோன்றிற்று.

இச் சித்தாந்தத்தின் வண்டலில் தமிழ்ப் பகைமை கடுமையாகப் படிந்துபோய் இருந்தது. மத குருக்களின் தலைமை தமிழ்,

ஐரோப்பிய காலனித்துவ வாதிகளையும் ஒன்றாகத் தாக்கியது. அது ஆரிய சிங்கள இனத்தின் பெருமையைப் பற்றி எடுத்துக் கூறிற்று. இதன் சாதாரண உதாரணம் ஒன்றின் மேற்கோள் இதோ,

"இன ரீதியாகச் சிங்களவர்கள் தன்னிகரில்லாத ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் அடிமை இரத்தம் இல்லை. அவர்கள் பிறசமயத்தவர்களாகிய தமிழர்களாலோ அல்லது கலாச்சாரச் செல்வங்களை நாசம் செய்யும் ஐரோப்பியர்களாலோ, ஒரு பொழுதும் கைப்பற்றப் படவில்லை. மூன்று நூற்றாண்டுகளாக ஐரோப்பியர்கள் நாட்டைச் சூறையாடினார்கள். பண்டைக் கோவில்களை அழித்தார்கள்...... வரலாற்று ரீதியான இனத்தை வேரோடு அழித்தொழித்தார்கள். கலாச்சார செல்வங்களின் நாசகாரிகளாகிய ஐரோப்பியர்கள் அதற்கு அழிவைக் கொணர்வதற்கு முன்னர் ஆரிய சிங்களவர்களால் இத் தீவு ஒரு சுவர்க்கமாக்கப்பட்டது.
("பண்டைய நாகரிகம் ஒன்றின் வரலாறு," அனகாரிக தர்மபால)

அரச சாதனங்களிலும், பொருளாதாரத்திலும் தமிழர்களின் ஆதிக்கம் நிலவியது. இதை பௌத்தமத மீட்டெழுச்சியில் இருந்து தோன்றிய சிங்கள வகுப்புவாதமானது "தேசிய அபிவிருத்திக்கு" ஓர் அச்சுறுத்தலாகக் கண்டது.

இப்படியான தேசிய எதிர்ப்புப் பகைமை, தத்துவார்த்தத் தளத்திலும் தனது குரலை எழுப்பியது. 1948ம் ஆண்டு அரச ஆட்சியதிகாரத்தைத், தேசிய சுதந்திரமானது சிங்கள தேசிய முதலாளித்துவ வர்க்கத்திடம் மாற்றிற்று. இதன் பின் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான சமூக, அரசியல், பொருளாதார அடக்கு முறைகள் ஸ்தூலமான உருவங்களை எடுக்கத் தொடங்கின.

## தேசிய ஒடுக்குமுறை

எந்த ஒரு தேசிய இயக்கத்தையும் ஆராய வேண்டுமாயின், அதை உலக முதலாளித்துவத்தின் வரலாற்று ரீதியான அபிவிருத்தியுடன் சம்பந்தப் படுத்தி ஆராய வேண்டிய தேவையை இயங்கியல் சடவாதத்தின் தத்துவார்த்த முன்நோக்கானது ஏற்படுத்துகின்றது.

பிரபுத்துவம் பொறிந்து அது முதலாளித்துவமாக இடைமருவியது. சந்தைகள் ஒன்றிணைக்கப் பட்டன. உற்பத்தி சக்திகள் புரட்சிகர அபிவிருத்தியடைந்தன. இவை புதியதொரு முதலாளித்துவ வர்க்கத்தின் பிறப்புக்கு வழிகோலின. இவற்றுடனேயே ஐரோப்பிய தேசிய இன அரசுகளின் தேசிய வாதமும் எழுந்

தது.

முதலாளித்துவ வர்க்கத்தினதும், முதலாளித்துவ தேசிய வாதத்தினதும் ஆதிக்கம் உயர்ந்தது. இது மற்றைய தேசிய இனங்களை நசுக்கவும், சுரண்டவும் வழிகோலிற்று. முதலாளித்துவத்தின் அபிவிருத்தியின் முன்னேறிய கட்டம், ஏகபோக முதலாளித்துவத்தைத் தோன்றச் செய்தது. இது உலக அரங்கில் ஏகாதிபத்தியத்தின் உருவத்தை எடுத்தது.

ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலும், ஒடுக்கும் முறைகளும், அதன் புறப் பரப்பிலிருந்த சமூக அமைப்புக்களின் மேலும், அவற்றின் உற்பத்தி முறைகளின் மேலும் தீர்க்கமான பாதிப்புக்களைக் கொணர்ந்தன.

உற்பத்தி சாதனங்களில் இருந்து நேரடி உற்பத்தியாளர்கள் பிரிக்கப்பட்டார்கள். பெருந்திரளானோர் சுதந்திரமான தொழிலாளர்களாகப் பட்டார்கள். ஊடுருவப்பட்ட சமுதாயங்களில் இந்த விளைபயன்கள் முதலாளித்துவ முறையின் இயக்காற்றலை உண்டு பண்ணின. உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தி பாட்டாளி வர்க்கத்தை இயக்க ரீதியாகப் புரட்சிகர சக்தியாக அணிதிரள வழிகோலியது.

ஏகாதிபத்திய ஊடுருவல் முதலாளித்துவ அபிவிருத்தியின இயக்காற்றலை உண்டுபண்ணியதோடல்லாமல், தேசியப் போராட்டங்களைப் புறப்பரப்பு சமூக அமைப்புகளுக்கு இடம் பெயர்த்தது.

விரிவடைந்துவரும் முதலாளித்துவ பொருளாதாரம் பரிணமம் அடைந்துள்ளது. அது உலக ரீதியாகத் தனது விளைபயன்களை ஏற்படுத்தியுள்ளது. இவற்றுடனும், இம் முதலாளித்துவ பொருளாதாரம் அதன் வெளிப்பரப்பில் அபிவிருத்தியடையும் முதலாளித்துவத்துடன் அமைப்பு ரீதியாகக் கொண்டுள்ள உறவுகளுடனும் உறவுபடுத்தியே மூன்றாம் உலக நாடுகளின் தேசிய வாதத்தின் இயல்பு, தேசியப் போராட்டங்களின் உறவுகள் என்பன பார்க்கப்பட வேண்டும்.

மூன்றாம் உலகின் இன்றைய தேசிய விடுதலைப் போராட்டங்களின் அமைப்பையும், தன்மையையும் உலக முதலாளித்துவ மேலாட்சியும், ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கப் பரப்பின் கீழ் புரட்சிகர பாட்டாளி வர்க்கங்களின் அபிவிருத்தியையும் மாற்றியமைத்துள்ளன.

முற்போக்கான தேசிய முதலாளித்துவ வர்க்கம் என்றழைக்கப்படும் தேசிய முதலாளித்துவ வர்க்கமானது தேசியப் போராட்டத்தை முன் எடுத்துச் செல்லும் சமூக ஜனநாயக சக்தியாக இருந்த அதன் தன்மையை இன்று இழந்துள்ளது. தேசிய முதலாளித்துவத்தின் சகல முற்போக்கான அம்சங்களை

யும் உலக முதலாளித்துவத்தின் வரலாற்று ரீதியான சூழ் இணைப்பு அழித்து அதன் புரட்சிகரத் தன்மையை இல்லாமற் செய்துள்ளது. இப்பணி இன்று புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் பணியாக மாறியுள்ளது.

## மூல உபாயம்

அடிப்படை வர்க்கக் கூறுகளில் ஏற்பட்டுள்ள இத்தகைய அமைப்பு ரீதியான பரிணாமங்கள் புரட்சிகர சோஷலிச மூல உபாயத்தை இன்றியமையாதது ஆக்கியுள்ளன. இவை வர்க்கப் போராட்டத்தைத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் பரஸ்பர ரீதியாக உறவுபடுத்துவதைத் தேவையாக்குகின்றன. இந்த மூல உபாயம் சுதேசிய முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராகவும், உலக முதவாளித்துவத்திற்கு எதிராகவும் வர்க்கப் போராட்டத்தைத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றாக முன்னெடுத்துச் செல்லும் மூல உபாயமாகும்.

தேசிய முதலாளித்துவ வர்க்கமானது இன்று உலக மூலதனத்தின் வலுக்கட்டாயத்தின் கீழ் இருக்கின்றது. இதனால் அது தேசிய ஜனநாயகப் புரட்சியில் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான பாகத்தை வகுக்க முடியாது. இதைச் "சுதந்திரத்திற்கு"ப் பிந்திய இலங்கையின் வரலாறு எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையின் தேசிய முதலாளித்துவ வர்க்கமானது உலக முதலாளித்துவத்துடன் கூட்டாக இலங்கைப் பொருளாதாரத்தைச் சுயாதீனமற்ற, வெளிநாடுகளில் தங்கியிருக்கும் பொருளாதாரமாகத் தொடர்ந்தும் பேண முயற்சித்து வந்துள்ளது. இதன் மூலம் மட்டுமல்லாது அது தமிழ் தேசிய இனத்துக்கு எதிராகக் கடைப்பிடித்து வந்துள்ள வகுப்புவாதக் கொள்கை மூலம் இலங்கைத் தேசிய முதலாளித்துவ வர்க்கம் தனது பிற்போக்குக் கோர முகத்தைக் காட்டியுள்ளது. இக் கொள்கையின் பிரதான நோக்கம் சிங்கள வெகுஜனங்களின் தொழிலாள வர்க்கத்தை பலவீனப்படுத்துவதாகும்.

உலக ரீதியான நவகாலனித்துவ அமைப்பினுள் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தைக் கெட்டியாக வேரூன்றச் செய்ததன் பின்னரே பிரித்தானிய ஏகாதிபத்தியம் தனது மகாராணியைத் தொடர்ந்தும் இலங்கை மக்களின் அரசியாகப் பேணிய வண்ணம் அவர்களுக்குச் சுதந்திரம் வழங்கியது.

தனது வர்க்க நலன்களால் உந்தப்பட்ட தேசிய முதலாளித்துவ வர்க்கமானது பிரித்தானியருடன் ஒத்துழைத்து; அவர்களின் அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்று ஆட்சி பீடம் ஏறியது.

தேசிய சுதந்திரம் என்று அழைக்கப்படும் சுதந்திரத்தைப் பெற்றதன் பின் தேசிய முதலா

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்



ளித்துவ வர்க்கமானது அதன் பிற்போக்குத் தன்மையை வெளிப்படுத்த ஆரம்பித்தது. கிடைத்த அரசியல் ஆட்சியதிகாரத்தைப் பகிர்த்து கொள்ளுவதில் சிங்கள, தமிழ் முதலாளித்துவ வர்க்கங்களுக்கிடையில் முட்டி மோதுதல்கள் ஏற்பட்டன. அப்பொழுது அரங்கில் செல்வாக்கு ஓங்கியவர்களாக இருந்த சிங்களத் தேசியவாதிகள் அரச இயந்திரத்தினைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்தனர்.

## தமிழ் நிலங்களில் சிங்களக் குடியேற்றம்

மரபுவழித் தமிழ் நிலங்களின் மேல் தேசிய சுதந்திரத்தின் பின் படிப்படியாக ஊடுருவலும், திட்டமிட்டு அவற்றைச் சேர்த்துக் கொள்ளும் திட்டமும்............

.........தணிக்கை..................

......இன்று எறக்குறைய ஈழத்தின் 3,000 சதுர மைல்களை விழுங்கியுள்ளன. அரச இயந்திரத்தின் உதவியுடனும், ஒத்தாசையுடனும் லட்சக் கணக்கான சிங்கள மக்கள் தமிழ் மக்களின் நிலங்களை இப்படித் திட்டமிட்டு ஆக்கிரமித்துள்ளனர். அதே நேரத்தில்...... தணிக்கை..........

—தணிக்கை—

—தணிக்கை—

## மொழி, கல்வி வேலை வாய்ப்புக்களின் அரசியல்

சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தின் தேசிய ஒடுக்குமுறை விரைவில், மொழி, கல்வி, வேலை வாய்ப்பு என்னும் துறைகளுக்கும் ஊடுருவியது. "தனிச் சிங்கள" வகுப்புவாத இயக்கத்திற்குத் திரு. பண்டாரநாயக்கா தலைமை தாங்கினார். இது அவரை 1956ம் ஆண்டில் ஆட்சி பீடத்தில் ஏற்றிற்று.

ஆட்சிக்கு வந்ததும், தமிழ் மொழி அனுபவித்து வந்த சம அந்தஸ்த்திற்கு ஒரு முடிவு கட்டியதே அவரின் முதலாவது பாராளுமன்ற நடவடிக்கையாகும். அவர் சிங்கள மொழியை நாட்டின் ஒரே ஒரு உத்தியோக மொழியாக்கினார்.

"தனிச் சிங்கள"ச் சட்டம் நிர்வாக சேவையில் சிங்களத் தலை

மை வேண்டும் என்றிற்று. சம்பள உயர்வு, பதவி உயர்வு, என்பனவற்றிற்கான உரிமைகள் மறுக்கப்பட்டுத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்கள மொழியைக் கற்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இல்லையேல் அவர்கள் வேலையிலிருந்து விலக வேண்டியிருந்தது.

நடைமுறையில் அவர்களுக்கு அரசாங்க சேவையில் வேலை வாய்ப்புக்களின் கதவுகள் மூடப்பட்டன. அத்தோடு வேலை வாய்ப்பில் தமிழர்களுக்கு எதிரான இனப்பாகுபாடு மற்றைய சேவைகளுக்கும், துறைகளுக்கும் விரிவடையச் செய்யப் பட்டது.

## இனப் பாகுபாடு

அரசாங்க சேவையில் தமிழர்களின் விகிதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. இதை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் 1956ம், 1970ம் ஆண்டுகளுக்கிடையிலான பின் வரும் விகிதங்கள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளது.

| | 1956 | 1970 |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவை | 30 | 5 |
| எழுது வினைஞர் சேவை | 50 | 5 |
| உயர் தொழில்கள் | 60 | 10 |
| ஆயுதப் படைகள் | 40 | 1 |

தனிச் சிங்களச் சட்டத்திற்கு 1972ம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்ட அந்தஸ்த்து வழங்கப்பட்டது. இதன் மூலம் முன்னர் தமிழ் மொழி பாவனை சம்பந்தமாக விட்டுக் கொடுக்கப்பட்ட சிறு சலுகைகள் தன்னும் முழுமையாக வெட்டப்பட்டன. இவை தேசிய ஒடுக்குதலை அமைப்பு முறையாக்கியதுடன் அதைச் சட்ட ரீதியானதுமாக்கின.

இப்படியான இழிவுகள் பெற்ற அரசியலமைப்புச் சட்டத்தை வகுப்பதற்கு வழமையான மார்க்சிசக் கட்சிகளாகிய பழைய சமசமாஜக் கட்சியின் ட்ரொட்ஸ்கிச வாதிகளும், கம்யூனிஸ்ட் கட்சியும், சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒத்துழைத்தார்கள். இது தமிழ் மக்களுக்கு மிகவும் மோசமான அதிர்ச்சியையும், நம்பிக்கை இழப்பையும் கொடுக்கும் அனுபவமாக இருந்தது.

கல்வித் துறையில் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக மிகவும் கீழ்த்தரமான பாரபட்ச முறை செயற்படுத்தப் பட்டது. இது குறிப்பாகப் பல்கலைக் கழக அனுமதி சம்பந்தமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

உயர் கல்வியில் தமிழர்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாரபட்சமாகத் தேர்ந்தெடுக்கும் இழிபுகழ்மிக்க "தரப் படுத்தல்" என்னும் முறையொன்று 1970ம் ஆண்டில் முதல் முறையாகக் கொண்டு வரப்பட்டது.

இந்த இனவாதத் திட்டமானது தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற வேண்டுமாயின் கூடுதலான புள்ளிகளை அவர்கள் பெற வேண்டும் என்றது. கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (உயர் தரம்) பரீட்சையில் தமிழ், சிங்கள மாணவர்கள் பெற வேண்டிய முழு மொத்தப் புள்ளிகளின் விகிதம் பின்வருமாறு;

| | தமிழ் மாணவர்கள் | சிங்கள மாணவர்கள் |
|---|---|---|
| வைத்தியம் | 250 | 229 |
| பொறியியல் | 250 | 227 |
| பௌதிக விஞ். | 204 | 183 |
| உயிரியல் விஞ். | 184 | 175 |

இந்தப் பாரபட்ச முறையானது தமிழ் இளைஞர்களின் உயர் கல்வி வாய்ப்பை பாரதூரமாகப் பாதித்தது. அவர்களின் பல்கலைக் கழக நுழைவு விகிதம் 1960ம் ஆண்டில் 40விகிதத்திலிருந்து 1975ம் ஆண்டில் 15 விகிதமாகப் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது.

அந்நிய மொழி ஒன்றின் திணிப்பினால் சினம் கொண்டு, உயர் கல்வி பெறும் சாத்தியக் கூறு இல்லாமலாக்கப்பட்டதினால் விரக்தியடைந்து, வேலையற்ற வாழ்க்கையின் மனமுறிவுள் தள்ளப்பட்ட தமிழ் இளைஞர்கள் தேசிய ஒடுக்குதலை எதிர்த்துப் போராடும் போராட்ட வேட்கை கொண்ட இரும்புத் திடசங்கற்பம் பூண்டவர்களானார்கள்.

# பொருளாதாரக் குரல்வளையை நெரித்தல்

தேசிய இன ஒடுக்குதலானது அதன் உக்கிரத்தை ஈழத் தேசிய இனத்தின் பொருளாதாரக் குரல்வளையை நெரித்தலிற் காட்டிற்று. தமிழ் ஈழப் பிரதேசங்களில் "சுதந்திரத்தின்" பின்னர் ஒரு சில அரச தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. இவற்றைத் தவிர்த்து தமிழ் பிரதேசங்கள், தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலத்திற்கு முற்றாகத் தவிர்த்து வைக்கப்பட்டன. சகல பொருளாதார உதவிகளையும் அரசு தெற்கிலேயே குவித்தது. இதனால் சிங்களத் தேசிய இனமானது பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்களோடு செழித்தோங்கியது. அதே நேரத்தில் தமிழ்த் தேசிய இனமானது வேண்டப்படாத ஒரு கலவியாக இவற்றிலிருந்து புறம்புபடுத்தப்பட்டுப் பொருளாதார இழப்பின் வனாந்தரத்தினுள் தள்ளப்பட்டது.

இதனால் தமிழ் தேசிய இனமானது பின் தங்கிய பொருளாதார நிலைமையினுள் விழுத்தப்பட்டது. இது ஒரு துக்ககரமான உண்மையாகும். உற்பத்தி ஆற்றல் கொண்ட அதன் தொழிலாளர்களின் சக்தி வீண்விரயமாயிற்று. ஆயின் அதே நேரத்

தில் தமிழ் முதலாளிகள் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஊக்குவித்தலின் கீழ் தமது மூலதனங்களை எடுத்துச் சென்று தெற்கில் முதலீடு செய்தார்கள். இந்த அப்பட்டமான உண்மை தமிழ் முதலாளிகளின் வர்க்க ஒத்துழைப்பையும், அவர்களின் வர்க்க நலன்களையும் மிகவும் கோரமாக எடுத்துக் காட்டுகின்றது.

## தமிழ் கிளர்ச்சிகளும், இனப் பயங்கரவாதமும்

1956ம் ஆண்டு "தனிச் சிங்களச் சட்டம்" அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதையடுத்து தமிழ் முதலாளித்துவ தேசிய வாதிகளின் தலைமையின் கீழ் உள்ள தமிழரசுக் கட்சி, வெகுஜனக் கிளர்ச்சி இயக்கங்களை ஆரம்பித்தது.

இவை மூலம் அது சமஷ்டிமுறைச் சுயாட்சியைத் தமிழ் மக்களுக்குக் கோரியது. வளரும் தேசியவாதத்தினால் அச்சுறுத்தப்பட்ட சிங்கள ஆளும் வர்க்கமானது, சில சலுகைகளை வழங்க உடன்பட்டது. இதன் பிரகாரம் அது ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டது. அரசியல் சுயாட்சியின் சில அம்சங்களைக் கொண்ட பிரதேச சபைகளை வழங்க இந்த ஒப்பந்தம் உடன்பட்டதோடு, சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படும் என்றும் அது உத்தரவாதம் செய்தது.

## —தணிக்கை—

இந்தச் சிங்கள வகுப்புவாத எழுச்சி, முன்னாள் பிரதமராகிய திரு. பண்டாரநாயக்காவை இந்த ஒப்பந்தத்தைக் கைவிடச் செய்தது. சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தின் இக்காட்டிக் கொடுப்பானது தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை மேலும் கூர்மைப் படுத்திற்று. இரு தேசிய இனங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் வலுவடைந்தன. இது 1958ம் ஆண்டில் கோர இனக்கலவரமாக வெடித்தது. இக் கலவரத்தில் நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டதோடு அவர்களின் உடைமைகளும் அழித்தொழிக்கப்பட்டன.

## தமிழரசுக் கட்சி

1958ம் ஆண்டு வகுப்புவாத நரபலி, தமிழ், சிங்களத் தேசிய இனங்களுக்கு இடையிலான உறவுகளில் மிகவும் ஆழமான பிளவை உண்டுபண்ணிற்று. தமிழ் தேசிய உணர்வுகள் கொப்பளித்

தன. தமிழரசுக் கட்சி 1961ம் ஆண்டில் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்த்து கோரும் அகிம்சை முறைச் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தது.

அரசின் ஒடுக்குமுறை இயந்திரம் உடனே வேகமாகச் செயற்பட்டு அமைதியான கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக இராணுவ பலாத்காரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. தமிழ் தேசியவாதத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குக் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள்.

சிங்களத் தேசிய முதலாளித்துவக் கட்சியாகிய யூ. என். பி. 1965ம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் அதனுடன் தமிழ் முதலாளித்துவ தேசிய வாதிகள் ஒத்துழைத்தார்கள். தமிழ் மொழிக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டதோடு ஓர் இரகசிய ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தமானது சிங்கள எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டது.

1971ம் ஆண்டிலிருந்து 1977ம் ஆண்டுவரையிலான இலங்கையின் வரலாறானது அதிர்ச்சியூட்டும் சம்பவங்களையும் முன்னர் என்றும் நிகழ்ந்திராத பொங்கியெழுச்சிகளையும் கொண்டுள்ளதாக உள்ளது அது பிரமாண்டமான காட்டிக் கொடுப்புக்கள், வெட்கக் கேடான வர்க்க ஒத்துழைப்புக்கள், பலாத்காரக் கிளர்ச்சிகள், கோரமான அடக்குமுறைகள் என்பனவற்றைக் கண்ட ஒரு வரலாறாகவும் உள்ளது பழிபாவங்களுக்குக் கிஞ்சித்தும் அஞ்சாத இழிபுகழுற்ற அரசாங்கத்தின் ஆட்சி வரலாறானது ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்திற்கும், அடக்கப்படும் சிங்கள மக்களுக்கும் அரசியல் ஒடுக்குதலின் கசப்பானதும், மிகவும் வேதனையைத் கொடுக்கின்ற படிப்பினைகளைப் புகட்டியுள்ளது

தமிழ்த் தேசிய இனமானது அமைப்பு முறைப்படுத்தப்பட்ட ஒடுக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது உருண்டோடிய சம்பவங்கள், தேசிய முரண்பாட்டின் புறநிலை ரீதியான நிலைமைகளை ஸ்தூலமானவையாக்கிப் புரட்சிகர பிளம்பின் திடீர் தோற்ற நிலைமையின் இயக்காற்றலைத் தோற்றுவித்தன. தேசிய வகுப்புவாதத்தாலும், இடதுசாரித் தலைமையின் காட்டிக் கொடுப்பாலும் முழுத் தொழிலாள வர்க்கமும் துக்ககரமான முறையில் பின் தள்ளப்பட்டது.

திருமதி பண்டாரநாயக்காவின் தேசிய முதலாளித்துவ கட்சிக்கும், வழமையான இடதுசாரிக் கட்சிகளாகிய சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட படுகேடான அரசியல் விவாகமானது "மக்கள் முன்னணி" என்று அழைக்கப்படும் அரசாங்கத்தை ஆட்சியதிகாரத்திற்குக் கொணர்ந்தது. இந்த அரசாங்கம் ஆட்சியதிகாரம் ஏறியதுதான் தாமதம் அது புரட்சிகர

கிளர்ச்சி எழுச்சியொன்றை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

தெற்கில் வேலையற்ற போராளி இளைஞர்களும், நிலமில்லா விவசாயிகளில் ஒரு பகுதியினரும் இயக்க ரீதியாக அணிதிரட்டப்பட்ட கிளர்ச்சி எழுச்சியில் குதித்தார்கள். செயல் வேட்டம் உள்ள புரட்சிகர இளைஞர்கள் திடீரெனக் கிளர்ச்சியைத் தொடுத்தார்கள். இது ஆயுதம் ஏந்திய பரந்தளவு வியாபித்த கிளர்ச்சியின் உருவத்தை எடுத்தது. இது உடனே மிகவும் மிலேச்சகரமான இராணுவ அடக்குமுறை கொண்டு எதிர்கொள்ளப்பட்டது. 10, 000 சிங்கள இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டதிலும், வேறு 15, 000 இளைஞர்கள் சிறைகளுட் தள்ளப்பட்டதிலும் இக்கிளர்ச்சி முடிந்தது.

முன்னொருபோதும் இப்படியான இளைஞர் கிளர்ச்சி நடந்திருக்கவில்லை. இதனால் இக் கிளர்ச்சி ஆளும் வர்க்கத்தை அச்சமுறச் செய்தது. ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் பகுதிகளில் இருந்து மேலும் புரட்சிகரக் கிளர்ச்சிகள் எழக்கூடும் என்று ஆளும் வர்க்கம் பீதி கொண்டது. அது அரச சாதனங்களின் மேல் தனக்கு இருந்த பிடியைப் பலப்படுத்தத் தீர்மானித்தது. அதன் பிரகாரம் அது அவசரகாலச் சட்டங்களைக் கொண்டு வந்ததுடன் வேறு அடக்குமுறைச் சட்டங்களையும் கொணர்ந்தது.

இவற்றுள் தேசிய இன ஒடுக்குதல் சம்பந்தமானவை மிகவும் முக்கியமானவையாக இருந்தன. இவை 1972ம் ஆண்டு பிரகடனப்படுத்தப் பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தின் உருவத்தை எடுத்தன. தேசிய சிறுபான்மை மக்களுக்கு முந்திய அரசியலமைப்புச் சட்டம் சில அடிப்படை உரிமைகளையும், சலுகைகளையும் வழங்கியிருந்தது. இவற்றைத் தன்னும் இப்புதிய அரசியலமைப்புச் சட்டம் அகற்றியது. தமிழ் பேசும் மக்களின் சார்பில் திருத்தங்கள், பிரேரணைகள் என்பன இந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு முன்வைக்கப்பட்டன. இவை அனைத்தும் இப்புதிய சட்டத்தால் நிராகரிக்கப்பட்டன.

எல்லாவற்றிலும் மேலாக இதை வகுத்த அரசியல் சட்ட நிர்ணய சபையின் நடவடிக்கைகளில் சிங்களத் தேசிய வகுப்புவாதம் தாண்டவமாடிற்று. தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இதனால் முழு ஏமாற்றம் அடைந்தார்கள். அவர்கள் நம்பிக்கை எதுவுமின்றி அரசியல் சட்ட நிர்ணய சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள். அரச ஆட்சியதிகாரத்தைத் தமிழர்களும் பகிர்ந்து கொள்ளும் நிலைமையை இந்தப் புதிய அரசியலமைப்புச் சட்டமானது ஒரு முடிவுக்குக் கொணர்ந்தது.

## பிரிவினைக்காகிய போராட்டம்

இந்தப் புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் ஒரு தேசிய இனத்தின் மக்கள் அரசியல் ரீதியில் அந்நியத்துவப் படுத்தப்படும் நிலைமை உருவாக்கப்பட்டது. இதனால் சிங்கள, தமிழ் உறவுகளில் மிகவும் ஆழமான நெருக்கடி ஏற்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டம் தேசிய இன ஒடுக்குமுறையைச் சட்ட ரீதியானதாக்கியது. தமிழ் தேசிய இனத்தின் மேல் ஆதிக்கம் செலுத்தி அதை அடக்குவதற்காகப் பொலீசுக்கு மேலதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

இதையடுத்து அப்பாவித் தமிழ் இளைஞர்களின் மேல் பொலீசார் அளவுக்கு மிஞ்சிய பலாத்காரத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். பொலீஸ் கொடுங்கோல் நிலவியது. அது சித்திரவதையின் கோரங்கள், விசாரணையின்றிச் சிறைப்படுத்தல், கொலைகள் என்பனவற்றின் உருவத்தை எடுத்தது. பழிவாங்கப்பட்ட இளைஞர்களின் போராட்ட வீரியம் மேலும் கூடியது. அவர்கள் இவற்றிற்குப் பதிலிறுக்கப் பலாத்கார நடவடிக்கைகளிலும், பயங்கரவாத நடவடிக்கைகளிலும் இறங்கினார்கள்.

ஆளும் சிங்கள உயர்ந்தோர் குழத்தால் வளரும் பொருளாதார நெருக்கடியையும், சமூக நெருக்கடியையும் தீர்க்க முடியாதிருந்தது. இதனால் அது சிங்களத் தொழிலாள வர்க்கத்தின் மேல் தனது ஆதிக்கத்தைக் காக்கவும், தனது ஆட்சியதிகாரத்தைப் பேணிக் கொள்ளவும் தேசிய வகுப்புவாத ஒடுக்குமுறையை உக்கிரப்படுத்தும் பிற்போக்கு மூல உபாயத்தைக் கடைப்பிடித்தது.

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கமானது, அரச யந்திரத்திற்கு எதிராக அணி திரட்டப்படுவதைத் தடுக்கத் தவிர்க்க முடியாத சிங்களத் தேசிய முதலாளித்துவ வர்க்கமானது, அதன் தேசிய வகுப்புவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இந்த முதலாளித்துவச் சதியில் பழைய இடதுசாரிகளும் கூட்டுச் சேர்ந்தார்கள். இது தொழிலாள வர்க்கம் முழுவதற்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட சித்திரவதைக்கும் தாக்குதலாகும்,

மக்கள் முன்னணி அரசாங்கம் என்றழைக்கப்படும் அரசாங்கத்தின் கீழ் சிறிய தமிழ் தேசிய இனமானது சிங்களத் தேசிய இனத்தால் ஒடுக்கப்பட்டது. இந்த ஆட்சியின் கீழ் இந்த ஒடுக்குதல் புதிய தொரு கடுமையையும், உறுத்தலையும் அடைந்தது. இவை இரு தேசிய இனங்களுக்குமிடையிலான கூட்டு வாழ்க்கையைச் சகிக்க முடியாதனவாக்கின. தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாடானது பிளவுமான நிலவும் நிலைமையாக மாறியது. ஒடுக்கப்படும் தேசிய இனத்

தின் வெகுஜனங்கள் பிரிவினை இலட்சியம் நோக்கி ஒரே இயக்கமாகத் துருவமுனைப்புப்பெற ஆரம்பித்தனர்.

தேசிய ஒடுக்குமுறை உச்ச கட்டத்தை அடைந்தது. பிரிவினையானது தமிழ் ஈழத் தேசிய இனத்தைப் பொறுத்தவரையில் தவிர்க்கமுடியாத விதியாக மாறிற்று. தமிழ் தேசிய முதலாளித்துவக் கட்சிகள் ஒன்றாக இணைந்து ஒரே இயக்கத்தை அமைத்தன. (தமிழர் விடுதலைக் கூட்டணியை அவை 1976ம் ஆண்டு அமைத்தன.) பிரிவினைக்காகிய தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தொடுக்க வேண்டும், அதற்கு உரிமைப் பணிப்பு வேண்டும், என்று அவை கோரின. 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இதை அவை தெட்டத் தெளிவாக:

"தமிழ்த் தேசிய இனமானது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது தாயகத்தில் இறைமையை நிலைநாட்ட வேண்டும். இதற்கு அது ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். சிங்கள அரசாங்கத்திற்கும், உலகிற்கும் இத் தீர்மானத்தைத் தெரியப்படுத்த வேண்டும். இதற்கு உள்ள ஒரே ஒரு முறைதான் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிப்பதாகும்." என்று தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறின.

தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்தவலில் இத்தேர்தலின் கிடைத்த முடிவானது மிகவும் தீர்க்கமான முடிவாகும். பொதுத் தேர்தல் திட்டவட்டமாகப் பிரிந்து செல்வது என்ற அடிப்படையிலேயே போராடப்பட்டது. அரசியல் அர்த்தத்தில் இத்தேர்தல் சர்வஜன வாக்கெடுப்பின் தன்மையை எடுத்தது. தேசிய இனமொன்று தனது விருப்பத்தைப் பகிரங்கமாகக் கூறுவதாக அது இருந்தது. தமிழ் மக்கள் மிகவும் எகப்படியான பெரும்பான்மையினால் பிரிந்து போவதற்காக வாக்களித்தனர். ஈழத் தேசிய இனத்தின் மக்கள் இந்த ஜனநாயக ரீதியான அரசியல் நடவடிக்கை மூலம் தமது சுயநிர்ணய உரிமையை, பிரிந்து சென்று தமக்கென அரசு ஒன்றை அமைக்கும் உரிமையை அவர்கள் பாவித்தார்கள்.

தமிழ் அரசியலில் புதியதொரு சகாப்தம் தோன்றிற்று. ஒடுக்குதலுக்கு எதிராகத் தேசிய இனமொன்று புரட்சிகரப் போராட்டத்தைத் தொடுக்கும் சகாப்தம் ஆரம்பித்தது.

1977ம் ஆண்டு இலங்கையில் நடந்த பொதுத் தேர்தலில் பரஸ்பர ரீதியாக எவ்வகையிலும் விட்டுக் கொடுக்காத பலம் மிக்க இரு சக்திகளை வாழ்வுக்குக் கொணர்ந்தது. பிரிவினையையும், இறைமையுள்ள தனி அரசையும் கோரும் தமிழ் தேசிய சுதந்திர இயக்கம் வாழ்வுக்கு வந்தது. மறுபுறம் எல்

ஒடுக்கப்படும் வெகுஜனப் பகுதிகளின் மேல் ஆதிக்கம் செலுத்தி, அவர்களை ஒடுக்கும் உரிமையைக் கோரும் இயக்கம் ஆட்சிக்கு வந்தது. இதனால் இரு தேசிய இனங்களுக்கும் இடையில் முக்கியமான அரசியல் முரண்பாடு தோன்றியது.

தணிக்கை

தமிழர்களின் அரசியல் சிந்தனையில் இந்த இனவாதப் பயங்கரவாதமானது பிரமாண்டமான பாதிப்பை ஏற்படுத்தியது. அது பிரிவினைக்கான போராட்ட உத்வேகத்தை வலுவடையச் செய்தது. தேசியப் பிரச்சினையைப் பாராளுமன்ற முறையிலான கிளர்ச்சி இயக்கங்கள் மூலம் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை இதனால் சிதறடிக்கப் பட்டது. கடந்த முப்பது வருடங்களாகத் தமிழ் தேசிய முதலாளித்துவ தலைமையானது ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தை விடுதலை செய்ய ஒரு பொழுதும் ஸ்தூலமான நடைமுறை ரீதியான வேலைத் திட்டத்தைக்கொண்ட அரசியல் நடவடிக்கையைக் கொண்டதாக இருக்கவில்லை. அது வெறுமனே தமிழ் தேசியவாதச் சுவாலையைப் பற்றவைத்து அதைக் கொழுந்து விட்டெரியச் செய்தது.

ஒரு பிரமாண்டமான மயக்கத் தெளிவு போராளித் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தோன்றிற்று. அவர்கள் கடந்த முப்பது வருடங்களாகக் கடைப்பிடித்து வந்த எவ்வித பலனையும் தராத அகிம்சை அடிப்படையிலான அரசியல் மூல உபாயம் பற்றிய மருட்சியில் இருந்து விடுபட்டவர்களானார்கள்.

தணிக்கை

# இரண்டாம் பாகம்

பிரிவினைக் கோரிக்கையை உண்டாக்குவித்த வரலாற்றின் சூழ் இணைவுகள், அக் கோரிக்கையைத் தீர்மானித்த வினைபயன்கள் என்பன பற்றி இக் கட்டுரையின் முதலாவது பாகம் சுருக்கமாக ஆவணப்படுத்தியுள்ளது. தேசிய ஒடுக்குதலே தேசியப் பிணக்கின் இயக்காற்றலுக்கும் தவிர்க்க முடியாத அரசியல் முடிவுக்கும் இட்டுச் சென்ற பிரதான காரணியாக இருந்துள்ளது. தேசிய ஒடுக்குதலையன்றி வேறெதுவும் இவற்றிற்குப் பிரதான காரணிகளாக இருக்கவில்லை. எனவே தேசிய ஒடுக்குமுறை பற்றிய ஆய்வானது, அதாவது தனியரசின் ஆட்சியதிகார அமைப்பின் கீழ் சிறியதொரு தேசிய இனமானது, பெரியதொரு தேசிய இனத்தால் ஒடுக்கப்படுவது பற்றிய ஆய்வானது முழுமையாகத் தத்துவார்த்த ஆய்விற்கும், அரசியல் உபாயத்திற்கும் ஒரு தீர்க்கமான காரணியாகுகின்றது.

மார்க்சிச தத்துவார்த்த ஆய்வினுள் இப்பிரச்சினையை நிலைநிறுத்தி அதைத் திட்டவட்டமாக வகுக்க வேண்டும். எமது கருத்தின்படி இதற்குப் போதுமான அடித்தளத்தை லெனினது தத்துவார்த்த தெளிவாக்கல்களும், அரசியல் மூல உபாயங்களும் எமக்குத் தந்துள்ளன. லெனின் சுயநிர்ணய கருத்துரு பற்றித் தெளிவுபடுத்தியுள்ளார். இத் தெளிவுபடுத்தல் முக்கியமாக ஒரு தேசிய இனத்தின் பிரிந்து செல்லும் உரிமையைப் பற்றியும், அது அரசாகுவது பற்றியும் எடுத்துக் கூறுகின்றது. இவற்றின் அடிப்படையில் நாம் தமிழ் தேசிய இனப் பிரச்சினையையும் அதன் அரசியல் வினைபயன்களையும் ஸ்தூலமாக முன்வைக்க முனைகின்றோம்.

நாம் லெனினது வழிகாட்டலிலேயே தங்கியிருக்கிறோம். இதற்குக் காரணம் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக மார்க்ஸ், எங்கல்ஸ் அல்லது வேறெந்தத் தத்துவவாதியோ பாட்டாளி வர்க்க நடைமுறைக்கு வேண்டிய கட்டுக்கோப்பான தத்துவம் ஒன்றையோ அல்லது ஸ்தூலமான அரசியல் மூல உபாயத்தையோ முன்வைக்கவில்லை. இதனால் தவிர்க்க முடியாத மட்டத்தில் இப் பிரச்சினை சம்பந்தமாக லெனினுடைய படைப்புக்கள் இன்றும் தத்துவார்த்த ரீதியானதும், அரசியல் ரீதியானதுமான வழிகாட்டிகளாக இருந்து வருகின்றன.

லெனின் தேசிய இனப் போராட்டத்தை வரலாற்றுச் சட்டவா

கத்தின் தத்துவார்த்த அமைப் ...ள் நிறுத்தி, வரலாற்று ரீதியான பொருளாதார ஆய்வை முன்வைக்கின்றார். அவர் தேசிய இனப் போராட்டத்தைப் பாட்டாளி வர்க்க போராட்டத்துடன் இடை உறவு படுத்தி சரியான பாட்டாளி வர்க்க முன் நோக்கை முன்வைக்கின்றார். அவருடைய ஆய்வானது முதலாளித்துவ ஜனநாயகத்தின் மட்டுப்பாடுகளையும் வங்குரோத்தையும் அம்பலப்படுத்துகின்றது அதே நேரத்தில் அது தீவிர தேசியவாதத்தின் அபாயங்களையும் அம்பலப்படுத்துகின்றது.

தேசிய சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஏற்காது விடுதல் அல்லது அவற்றை நிராகரித்தல் என்பன மிகவும் ஆழமாகத் தொழிலாளர் வர்க்கத்தைப் பாதிக்கும். அது சோஷலிசப் புரட்சிக்காகிய பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தை இடையூறு செய்யும் என்ற நிலைப்பாட்டை லெனின் கடைப்பிடித்தார்.

லெனின் ஆய்வை நாம் எமது வழிகாட்டியாகக் கொள்ளுகின்றோம். ஆனால் அதே நேரத்தில் ஒவ்வொரு தேசியப் போராட்டத்தையும் அதன் வரலாற்று ரீதியான நிலைமைகளின் சூழமைவுள் நிலை நிறுத்த வேண்டும், என்பது பற்றி நாம தெரியாது இருக்கவில்லை.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமானது அரசியல் சுதந்திர... இதன் வரலாற்று... மைவுகளை நாம் முன்வை... ரித்துள்ளோம். பிரதானமாகக் தேசிய ஒடுக்குமுறையினால் தோற்றப்பட்ட முரண்பாடுகளில் இருந்து உதித்தது. எனவே இதை நாம் தேசிய இனத்தின் பிரிந்து செல்லும் உரிமையின் தத்துவார்த்த தனிக் குறியீட்டினுள்ளும் அதன் அரசியல் விளைபயன்களினுள்ளும் கட்டுப்படுத்த வேண்டியவர்களாகுகின்றோம்.

இந்தச் சூழமைவுள், பல பிரச்சினைகள் முன்வைக்கப்படுகின்றன. ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்திற்குப் பிரிந்து செல்லும் உரிமை இருக்கின்றதா? இத் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையானது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துற்குப் பாதகமாகச் செல்லுகின்றதா? எப்படியான, எந்த அரசியல், பொருளாதார ஒடுக்குமுறைகளின் கீழ் ஒரு தேசிய இனமானது பிரிந்து செல்ல தீர்மானிக்கும்? இப்படிப் பிரிந்து செல்ல எடுக்கும் தீர்மானமும், அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டமும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் ஒடுக்கும் தேசிய இனத்தினதும் வர்க்கப் போராட்டத்தின் வர்க்க நலன்களுக்குச் சேவை செய்கின்றனவா?

இவற்றோடு அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டமானது ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் சமூக அமைப்பின்

...ரிணுமத்வைதயும், ... புரட்சியை ...ன் எடுத்துச் செல்லுவதற்கான இயக்காற்றலைக் கொண்டிருக்கின்றதா? ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களின் பங்கும் அவர்களின் மூல உபாயமும் எவையாக இருக்க வேண்டும்? அவர்களது தேசிய இனத்தின் தேசிய இயக்கமானது இன்று முதலாளித்துவ வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்டு வருகின்றது. இக்கட்டத்தில் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர் பங்கும், மூல உபாயமும் எத்தன்மையானவையாக இருக்க வேண்டும்? ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் ஒடுக்கும் தேசிய இனத்தினதும் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்குச் சேவை செய்யக் கூடிய அரசியல் மூல உபாயம்தான் என்ன?

இந்த மூல உபாயமானது ஒடுக்கும் தேசிய இனத்தின் மார்க்சிசப் புரட்சியாளர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய மூல உபாயமாகும். ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் ஒடுக்குதலுக்கு எதிரான முற்போக்கான போராட்டத்திற்கும், ஒடுக்கும் தேசிய இனத்தின் பிற்போக்கான முதலாளித்துவ தேசியவாதத்திற்கும் இடையில் மார்க்சிஸ்டுகள் அகப்பட்டுள்ளார்கள். இவர்களின் மூல உபாயம்தான் என்ன?

இப்பிரச்சினைகள் தமிழ் ம... சியப் பிரச்சினையின் சூ... வினுள் கிளப்பப்பட்டு மிகவும் உக்கிரமாக விவாதிக்கப் பட்டு வருகின்றன. இந்த விவாதங்கள், தர்க்கங்கள் என்பன தெளிவு அற்ற பொதுக் கருத்துக்கள் திட்டவட்டமற்ற கருத்துருப்படுத்தல்கள் என்பனவற்றுள் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. இதனால் இவை பெருமளவு குழப்பத்தையும், வாத எதிர்வாதங்களையும் ஏற்படுத்தியுள்ளன. எனவே இப்பிரச்சினை சம்பந்தமாகத் தெளிவும், சரியான முன்நோக்கும் முழுமையாகத் தேவைப்படுகின்றது.

இலங்கையில் உள்ள சில மார்க்சிச இயக்கங்கள் 1960ம் ஆண்டுகளில் தமிழ் பிரச்சினை சம்பந்தமாகத் தாம் கடைப்பிடித்த மிதவாத நிலைப்பாட்டைக் கைவிட்டு விட்டுச் சிங்கள வகுப்புவாதத்திற்கு இரையாகின (இன்று சிதறுண்டு போய் இருக்கும் பழைய இடதுசாரி இயக்கங்களை இங்கு நான் குறிப்பிடவில்லை.) இந்த தத்துவார்த்தக் குளறுபடியில் அகப்பட்டுள்ளார்கள். இவர்கள் தம்மை லெனினிஸ்டுகள் என்று அழைக்கின்றார்கள், ஆனால் அவர்கள் ஒடுக்கும் தேசிய இனத்தின் தேசியவாதத்தினுள் புதைந்து போய் இருக்கின்றார்கள். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்குப் பாட்டாளி வர்க்க சர்வதேசியமானது இயங்கியல் ரீதி

்றக எதிரானது என்பது போ ... அதை இந்த இழிவான மார்க்சிஸ்டுகள் முன் வைக்கின் ...கள். இது ...ச லக்சம் போக்கின் நிலைப்பாட்டை ஒத்த தாகும். தேசிய இனங்கள் பற்றிய பிரச்சனை சம்பந்தமாக ரோச லக்சம்போர்க் கொண்டிருந்த தெளிவற்ற கருத்துக்களை லெனின் மிகவும் வன்மையாக கண்டித்ததோடு அவற்றை நிராகரித்தார்.

இந்தப் போலி மார்க்சிஸ்டுகள் தமது தத்துவார்த்த வாதங்களைப் பலப்படுத்த லெனினது நூல்களில் இருந்து இரவல் சொற்களை இணைத்து மேற்கோள் காட்டி வருகின்றார்கள். அதாவது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பல்வேறு சூழமைவுகளில் இருந்து வசனங்கள் பொறுக்கி எடுக்கப்படுகின்றன. இவை அதன் பின் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முற்போக்கான போராட்டத்திற்கு எதிராக அதைச் சாடப் பாவிக்கப்படுகின்றன. எமது தத்துவார்த்த முயற்சியின் ஒரு நோக்கம் இந்த நிலைப்பாடுகளுக்குச் சவாலிடுவதாகும். அதோடு இந்தக் கொச்சையாக்கப்பட்ட மார்க்சிசத்தின் பின் இருக்கும் அரசியற் சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்திச் சரியான பாட்டாளி வர்க்க முன்நோக்கைத் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக முன் வைப்பதுமேயாகும்.

தமிழ்த் தே... வரலாற்று ரீதியாக ... பட்ட ஒரு சமூக அமைப்பாகும். அது ஒரு தேசிய இனத்தை வரையறை செய்ய வேண்டிய ஸ்தூலமான அடிப்படை அம்சங்கள் அத்தனையையும் கொண்டிருக்கின்றது. ஸ்டாலினிசத்தின் அடியோடு செப்பமடையாத வரையறையைக் தன்னும் எமது பிரச்சினை சம்பந்தமாக முன் வைக்க முடியும். என்றாலும் ஒரு தேசிய இனமாக இருப்பது எது? என்பது பற்றிய தத்துவார்த்த ரீதியான வரையறை தேவையாகும். ஏனென்றால் நாம் எமது பிரச்சினையை, லெனினுடைய தேசிய இனங்களின் சுயநிர்ணய கருத்துருவின் வரையினுள் திட்டவட்டமாக ஒழுங்குமுறைப்படுத்திக் கூற முடியும்.

சுய நிர்ணயம் என்னும் கருத்துரு திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வரையறை செய்யப்பட வேண்டும். இப்படித் தெளிவு படுத்தல் எமது தேசியப் பிரச்சினைக்கு முக்கியமானதாக உள்ளது. ஏனென்றால் இந்த அடிப்படைக் கருத்துரு சம்பந்தமாக இலங்கையில் உள்ள மார்க்சிஸ்டுகள், லெனினிஸ்டுகள் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்கள் குழம்பிய தெளிவற்ற நிலையில் இருந்து வருகின்றார்கள். தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை இவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் அதே நேரத்தில், அதற்கு உள்ள பிரிந்து செல்லும் உரிமை மறுக்

...தற்குக் காரண ...சுய நிர்ணய உரிமை என்னும் கருத்துருவை இவர்கள் மிகவும் விசித்திரமான முறையில் எடுத்துக் கூறுவதோடு அதற்குப் பிழையான கருத்துருவமும் கொடுத்து வருகின்றார்கள்.

இந்த அரசியற் சந்தர்ப்பவாதிகள் புரட்சியாளராகத் தமது மிதவாத முகத்தைக் காட்ட முயற்சிக்கின்றார்கள். இவர்கள் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படும் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு என்கின்றார்கள். அதே நேரத்தில் இவர்கள் தமிழ் பேசும் மக்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமை இல்லை என்கின்றார்கள். இந்த நிலைப்பாட்டில் திண்ணியமாக வரையறை செய்யப்பட்ட கருத்துருவைத் திட்டமிட்டுத் திரிபு செய்யப் படுவதை எவராலும் காணக் கூடியதாக இருக்கின்றது.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது வேறெதுவுமல்ல, ஆனால் பிரிந்து சென்று சுயாதீனமான அரசொன்றை அமைப்பதே என்பதைத் தேசியப் பிரச்சினை சம்பந்தமான லெனினின் நூல்கள் மீண்டும், மீண்டும் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றன. ஒரு சில உதாரணங்களை நாம் மேற்கோள் காட்டுவோமாயின்:

"எனவே நாம் சுய நிர்ணயத்தின் அர்த்தத்தைப் புரி... கொள்ள வேண்டுமாயின் ... சட்ட ரீதியான வரையறைகளைக் குலுக்குவதன் மூலமோ அல்லது திண்ணியமற்ற வரையறைகளைக் கண்டுபிடிப்பதன் மூலமோ புரிந்து கொள்ள முடியாது. ஆனால் நாம் தேசிய இயக்கங்களின் வரலாற்றுப் பொருளாதார நிலைமைகளை ஆராய வேண்டும். அப்பொழுது நாம் தவிர்க்க முடியாது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அந்நிய அமைப்புக்களில் இருந்து இத்தேசிய இனங்கள் அரசியல் பிரிவினை மூலம் சுயாதீனமான தேசிய அரசை அமைப்பதே என்னும் முடிவுக்கு வருவோம். (தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, லெனின்.)

அதே தத்துவார்த்த கட்டுரையில் லெனின் எழுதுகின்றார்:

"'அரசியல் சுய நிர்ணயம்' அரச சுதந்திரம், தேசிய அரசு ஒன்றை அமைத்தல் என்னும் அர்த்தங்களைத் தவிர வேறு எந்த அர்த்தத்தையும் வரலாற்றுப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மார்க்சிச வேலைத் திட்டத்தில் உள்ள சுய நிர்ணய உரிமை கொண்டிருக்க முடியாது."

லெனின் இப்படித் திட்டவட்டமாக வரையறை செய்கின்றார். லெனின் வரையறையில் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரி

மை என்பது ஒடுக்கப்படுந் தேசிய இனமானது ஒடுக்கும் தேசிய இனத்தில் இருந்து பிரிந்து சென்று சுயாதீனமான தேசிய அரசை அமைக்கும் உரிமையாகும். எனவே தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை ஏற்பவர்களைப் பரசாங்கு செய்பவர்கள், அதே நேரத்தில் சுய நிர்ணய உரிமையானது பிரிந்து செல்லும் உரிமையையும் உள்ளடக்கவில்லை என்று வாதிடுகின்றார்கள். இவர்கள் மார்க்சிஸ்டுகளும் அல்ல, லெனினிஸ்டுகளும் அல்ல. ஆனால் சோஷலிஸ்டுகள் என்று பவனிவரும் வகுப்புவாதிகளாவர். லெனினது வார்த்தைகளில் இந்தப் போலி சோஷலிஸ்டுகளை நாம் வர்ணிப்போமாயின்:

"ஒடுக்கும் எந்த ஒரு தேசிய இனத்தின் சோஷலிஸ்ட்டாகிய ஒருவர், தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை (அதாவது பிரிந்து செல்லும் உரிமையை) ஏற்காமலும் அதற்காகப் போராடாமலும் இருப்பாராயின் அவர் உண்மையில் ஒரு வகுப்புவாதியேயன்றி ஒரு சோஷலிஸ்ட் அல்ல."

லெனினுடைய தத்துவார்த்த ஆய்வில் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பிரிந்து செல்லும் உரிமையானது, ஒரு தளத்திலேயே முன் வைக்கப்படுகின்றது. அதாவது தொழிலாள ஜனநாயகத்தின் பிரபஞ்சரீதியான ஒரு கோட்பாடாகவே அது முன் வை... ஒடுக்கப்படும் தே... பிரிந்து செல்லுவதற்கான போராட்டமானது வெகுஜன நடவடிக்கைக்கான ஒரு புரட்சிகர அடித்தளமாகவும், முதலாளித்துவத்திற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் தொடுக்கும் புரட்சிகரத் தாக்குதலாகவும் அது காணப்படுகின்றது.

எனவே லெனினது அரசியல் மேதாவித்தனம் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் இப்போராட்டத்தை, சோஷலிச ஜனநாயகத்தினதும், பாட்டாளி வர்க்க புரட்சியினதும் அரங்கினுள் நிலை நிறுத்திற்று. நாம் திட்டவட்டமாக இந்த இரு அரங்குகளினுள்ளேயே தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்திற்கான இப்போராட்டத்தின் முற்போக்கானதும், புரட்சிகரமானதுமான தன்மையைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

லெனின் பிரிந்து செல்லும் உரிமைக்காக வாதிடுவதோடு, தேசிய ஜனநாயக வேலைத் திட்டத்தில் சுய நிர்ணயத்திற்காகக் குரல் கொடுத்தார். இதன் மூலம் அவர் தனது சக புரட்சியாளர்கள் மத்தியில் மிகவும் உக்கிரமான வாதப்பிரதிவாதங்களை மூட்டிவிட்டார். இப்படியான உரிமை சிறிய அரசுகள் சிதறுண்டு போவதற்கும், அரசுகள் சிறு சிறு பகுதிகளாகப் பிளந்து போவதற்கும் வழிகோலுமா? பிரிந்து செல்லுவதற்கான உரி

...ட்டாளி வர்க்க சர்... சியத்திற்கு முரண்பட்டதா? என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. இவை சம்பந்தமாக லெனின் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்துக் கட்டிக் காத்து வந்த நிலைப்பாடானது எமக்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனென்றால் திட்டவட்டமாக இக்கேள்விகளே இன்று பிரிந்து செல்லும் உரிமை கோரும் தமிழ் கோரிக்கைக்கும் எதிராக ஏவி விடப்பட்டு வருகின்ற கேள்விகளாகும்.

## பாட்டாளி வர்க்க சர்வதேசியம்

பிரிந்து செல்லும் உரிமையை பிற்போக்கு முதலாளித்துவ மூலக் கூறுகிய "பிரிவினை வாதத்"துடன் குழப்பியடிக்கக் கூடாது. "பிரிவினை வாத"க் கோரிக்கையானது சில சந்தர்ப்பங்களில் ஒடுக்கப்படுந் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைக்கு குழிபறிப்பதற்காக பாவிக்கப்படுகின்றது.

சுய நிர்ணயக் கருத்துருவினுள் குரலெழுப்பப்படும் பிரிந்து செல்வதற்கான சுதந்திரம், பிரத்தியேகமாக ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் மக்கள், ஒடுக்கும் தேசிய இனத்தில் இருந்து அரசியல் சுதந்திரம் பெறக் கிளர்ச்சி செய்யும் உரிமையிலிருந்து பிரித்தெடுக்கமுடியாததொரு உரிமை என்பதையே பொருள் கொள்ளுகின்றது. பிரிந்து செல்லுவதற்காகக் கிளர்ச்சி செய்வது பூரணத்துவமான சுதந்திரமான ஓர் உரிமைக்காகும். இந்த உரிமை சகிக்க முடியாத ஒடுக்குதலின் கீழ் பாவிக்கக் கூடிய உரிமையாகும்,

எனவே லெனின் பிரிந்து செல்லும் இந்த உரிமையை ஏற்கும் பொழுது அவர் பெரிய தேசிய இனத்தின் வகுப்புவாதத்திலிருந்து எழும் பிணக்கைத் தவிர்க்க வேண்டுமாயின் இந்த உரிமை இன்றியமையாதது என்று மீண்டும், மீண்டும் வாதிட்டு வந்தார். தேசிய இனங்களின் முழுமையான சமத்துவத்தை இந்த உரிமையானது சீராக்கிப்பிடிக்கின்றது. இந்த உரிமையானது மீறப்படும் பட்சத்தில், இந்த மீறுதல் தேசிய குரோதத்திற்கும், பகுதி, பகுதிகளாகப் பிரிந்து செல்லுவதற்கும் வழி கோலும்.

இங்குதான் லெனின் இயங்கியல் கோட்பாட்டை, அதாவது ஐக்கியத்தை உறுதிப்படுத்த விவாகரத்துச் செய்யச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்னும் கோட்பாட்டை முன்வைக்கின்றார். விவாகரத்துச் செய்ய உள்ள சுதந்திரமானது குடும்பத்தைச் சிதறுண்டு போகச் செய்யாது எனவே லெனின் தான் பிரிவினைவாதச் சித்தாந்தத்தை முன்வைக்கவில்லை ஆனால் சோஷலிச ஜனநாயகத்தின அதி உன்னத

கோட்பாட்டை முன் வைப்பதாக கூறினார். லெனின் ஒடுக்கப்படும் நிலைமையின் கீழ் ஒரு தேசிய இனத்தின் மக்களுக்குப் பிரிந்து செல்லுவதற்கான பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்றார். லெனினை நாம் மேற்கோள் காட்டுவோமாயின்:

"அரசியல் ஜனநாயகத்திற்கான இக் கோரிக்கையானது திட்டவட்டமாக பிரிந்து செல்லக் கிளர்ச்சி செய்யப் பூரண சுதந்திரம் உண்டு என்ற அர்த்தத்தைக் கொண்டிருக்கின்றது. — — — எனவே இக் கோரிக்கையானது பிரிவினைக்கும், பகுதி பகுதியாகப் பிரிப்பதற்கும் சிறு அரசுகளாக அமைப்பதற்கும் சமமானதல்ல. இதன் அர்த்தம்தான் எல்லாத் தேசிய ஒடுக்குதல்களுக்கும் எதிரான போராட்டத்தின் தொடர்ச்சியான வெளித்தோற்றமாகும்." (லெனின்: சோஷலிசப் புரட்சியும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும்).

மார்க்சிச அரசியல் நடைமுறையானது நிச்சயமாகப் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை முன் எடுத்துச் செல்லுகின்றது. ஆனால் அதே நேரத்தில் தேசிய இயக்கங்களின் புரட்சிகரத் தன்மையையும். வரலாற்று ரீதியாக அவற்றிற்கு உள்ள சட்ட ரீதியான உரிமையையும் அது பூரணமாக ஏற்றுக்கொள்ளுகின்றது. தேசியத் தன்மையின் கோட்பாடானது அல்லது தேசிய வாதத்தின் இயல் நிகழ்ச்சி, மார்க்சிச ஆய்வில் முதலாளித்துவ சமுதாயத்தில் வரலாற்று ரீதியாகத் தவிர்க்க முடியாததொரு அரசியல் நிகழ்ச்சியாக குணாம்சப்படுத்தப் பட்டுள்ளது.

மார்க்சிசத்தைப் பொறுத்தளவில், தேசியவாதமானது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு முந்தியதாகும். முன்னேற்றம் அடைந்த முதலாளித்துவ சமூக அமைப்புகளில் ஏற்படும் பாட்டாளி வர்க்க புரட்சிகள் சர்வதேசியத்தின் முற்போக்கு சக்திகளை உண்டாக்கும் என்று மார்க்ஸ் முன்கூட்டியே கண்டார். இவை மார்கசின்படி படிப்படியாக உலக சோஷலிச சமுதாயத்தை அமைப்பு ரீதியாக்கி உலக சோஷலிச சமுதாயத்தைக் கெட்டியாக்குவன.

மகத்தான சோஷலிசப் புரட்சியானது வரலாற்று ரீதியாக அவிழ்ந்து விரிவடைவதைக் கண்ட லெனின் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் தீவிர ஆதரவாளரானார். ஏனெனில் அவர் செம்மனை ஐக்கியப்பட்ட சர்வதேசப் பட்டாளி வர்க்கம் ஒன்றே உலக முதலாளித்துவத்தைச் சவாலிட்டு, அதை வெற்றி கொள்ள முடியும் என்று நம்பினார். எனவே லெனின் தனது நூல்களில் அனைத்துலக முதலாளித்துவ மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராட எல்லாத் தேசிய இனங்களினதும், தொ

ழிலாள வர்க்கங்களினதும் ஐக்கியம் வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளார்,

ஆனால் மறுபுறம் லெனின் ஒடுக்கப்பட்டோரின் மிகவும் தீவிரமான ஆதரவாளராக இருப்பதைக் காண்கின்றோம். அவர் தீவிரமாக எல்லாவகையான ஒடுக்குதல்களுக்கும் எதிராகப் போராடினார். அவர் தேசிய ஒடுக்குதலானது, வர்க்கப் போராட்டத்தின் எதிரி என்பதைச் சரியாகக் கண்டார். ஒடுக்கப்பட்டோரின் விடுதலையின்றி ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் ஒடுக்கும் தேசிய இனத்தினதும் பாட்டாளி வர்க்கங்களின் வர்க்க ஐக்கியமானது அடைய முடியாததொன்று என்று அவர் கருதினார். இக் காரணங்களினாலேயே பாட்டாளி வர்க்க சர்வதேசியமானது, ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம், ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்குச் சுய நிர்ணய உரிமையை (அதாவது பிரிந்து செல்லும் உரிமையை) வழங்க வேண்டும் என்று லெனின் ஸ்திரமாக நம்பினார்.

'பாட்டாளி வர்க்கமானது ஒடுக்கப்படும் தேசிய இனங்களைக் குறிப்பிட்ட ஒரு அரசின் எல்லைக்குள் பலவந்தமாக வைத்திருப்பதற்கு எதிராகப் போராட வேண்டும். இதன் அர்த்தம்தான் அவர்கள் சுய நிர்ணய உரிமைக்காகப் போராட வேண்டும் என்பதாகும். "தமது" தேசிய இனத்தால் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் காலனிகளுக்கும் அரசியல் ரீதியாகப் பிரிந்து செல்லும் உரிமையைப் பாட்டாளி வர்க்கம் கோர வேண்டும். இல்லாவிடில் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியமானது வெறும் பசப்பற்ற சொற்களாக மாறும். ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும், ஒடுக்கும் தேசிய இனத்தினதும் தொழிலாளர்களுக்கு இடையில் நம்பிக்கையோ அல்லது வர்க்க ஐக்கியமோ சாத்தியமாகாது. (லெனின் சோஷலிசப் புரட்சியும், தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையும்.)

இலங்கையில் சில அரசியல் சந்தர்ப்பவாதிகள் மார்க்சிசத்தையும், லெனினிசத்தையும் இழிசெயலுக்கு உள்ளாக்கி வருகின்றார்கள். அவர்கள் தாம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கடைப்பிடிப்பதினால் பிரிந்து செல்லும் தமிழ்க் கோரிக்கைக்குத் தாம் எதிரிகளாக இருப்பதாக பிரகடனப்படுத்தியுள்ளார்கள். தேசியப் பிரச்சினை சம்பந்தமாக லெனின் முன்வைத்த பாட்டாளி வர்க்க மூல உபாயத்தைப் பற்றி எதுவும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் கோஷங்களின் கீழ் ஒடுக்கும் தேசிய இனமும், ஒடுக்கப்படும் தேசிய இனமும் ஐக்கியப்படத் தொடுக்கும் முற்போக்கான போராட்டத்தைப் புறக்கணிக்கின்றார்கள்.

இந்தப் போலி சர்வதேசிய மானது ஒடுக்கப்படும் தேசிய இனத்தினது முற்போக்கான தேசிய வாதத்தைக் கிழறுக்கவும், அதைக் கடந்து செல்லவும் முயற்சிக்கின்றது. இதையே மார்க்ஸ் "முதலாளித்துவ தேசிய வாதச் சர்வதேசியம்" என்று சரியாக வர்ணித்தார். லெனின் இந்த "மன்னிக்க முடியாத" சந்தர்ப்பவாதத்தை அம்பலப் படுத்தினர். சுய நிர்ணய உரிமையை ஏற்காது சர்வதேசியத்தின் கோஷங்களைக் கிழப்புகின்ற ஒடுக்கும் தேசிய இனத்தின் சோஷலிஸ்டுகள் என்றழைக்கப்படுபவர்களை லெனின் அம்பலப்படுத்தினர். அவர் ஒடுக்கப்படும தேசிய இனத்தின் அச்சத்தையும் ஐமிச்சத்தையும் போக்க ஒடுக்கும் தேசிய இனமானது நஷ்ட ஈடு தன்னும் வழங்க வேண்டிய தேவையை வலியுறுத்தினர்.

"ஒடுக்குவோர் அல்லது பேரினம் எனப்படும் தேசிய இனத்தைப் (அவர்கள் பலாத்காரத்திலும் சண்டித்தனத்திலும் மட்டுமே பெரியவர்களாக இருப்பினும்) பொறுத்தமட்டில் சர்வ தேசியவாதம் என்பது தேசிய இனங்களுக்கிடையில் பேரளவில் சமத்துவத்தைக் கடைப் பிடிப்பது என்பது மட்டுமன்றி ஒடுக்கும் தேசிய இனமானது — பேரினம் — நடைமுறையில் நிலவும் ஏற்றத்தாழ்வுக்கு ஈடு செய்யும் வகையில் தானே சம உரிமைக்குக் குறைந்த உரிமைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை யார் புரிந்து கொள்ளவில்லையோ, அவர் தேசியப் பிரச்சனை பற்றிப் பாட்டாளிவர்க்கத்தின் உண்மையான அணுகுமுறையை, கொள்கையைப் புரிந்து கொள்ளவில்லை; அவர் சாராம்சத்தில் இன்னமும் குட்டி பூர்ஷ்வாக் கண்ணோட்டத்தையே கொண்டுள்ளார்; எனவே இந்நிலையில் அவர் பூர்ஷ்வாக் கண்ணோட்டத்தைப் பெற்றுவிடுவார் என்பது உறுதி."

(லெனின்:தேசிய இனங்களின் பிரச்சனை அல்லது "பிரதேச சுயாட்சியாக்கம்")

தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையானது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் சோஷலிசக் கோட்பாட்டை மீறவில்லை. இதற்கு மாறாக அது லெனின் எடுத்துக் காட்டியது போல சர்வ தேசியத்தைமுன் எடுத்து செல்ல ஒரு அடிப்படைத் தேவையாகும். ஆதிக்கம் உள்ள பெரிய தேசிய இனத்தின் ஒடுக்குதலுககு எதிராகப் போராடும் விடுதலைப் போராட்டத்தில் அகப்பட்டுள்ள மக்களுக்கு சர்வதேசியத்தின் உன்னத இலட்சியங்களைப் பற்றிப் போதிப்பதானது வகுப்புவாதம் மட்டத்திற்கும் அரசியல் சந்தர்ப்பவாதம் மட்டத்திற்தும் செல்லுவதாக முடியும்.

தமிழ் தேசியப் பிரச்சினை சம்பந்தமான எமது விவாதத்

தின் மிகவும் தீர்க்கமான கட்டத்தை நாம் இப்பொழுது அணுகுகின்றோம். அதாவது எத்தகைய அரசியல் பொருளாதார ஒடுக்குதல்களின் கீழ் ஒரு தேசிய இனமானது பிரிந்து செல்லத் தீர்மானிக்கும்? இப்படியான தீர்மானமும் தேசிய சுதந்திரத்திற்கான போராட்டமும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும், ஒடுக்கும் தேசிய இனத்தினதும் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்குச் சேவை செய்கின்றனவா? இப்பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தல் இலங்கையில் உள்ள பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களின் தத்துவார்த்த விளக்கத்திற்கும், அரசியல் மூல உபாயத்திற்கும் இன்றியமையாததாகும். இவர்கள் பிரிந்து செல்லும் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ள தேசிய இனத்தின் தேசியப் போராட்டத்தை எதிர்கொள்ளுகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

## தணிக்கை

லெனின் கூறுகின்றார்:

"வெகுஜனங்கள் தமது நாளாந்த அனுபவத்தில் இருந்து பூகோள மற்றும் பொருளாதார உறவுகளின் பெறுமதியையும் பெரிய சந்தையினதும், பெரிய அரசினதும் மேன்மையையும் பற்றி நன்கு அறிவார்கள். எனவே அவர்கள் தேசிய ஒடுக்குதலும் தேசியப் பிணக்கும் கூட்டு வாழ்க்கையை அடியோடு சகிக்க முடியாததாக்கிய கட்டத்திலும், எல்லாப் பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களும் தடையாகும் பொழுதே அவர்கள் பிரிந்து செல்லுவதை நாடுவார்கள். இக் கட்டத்தில் பிரிந்து செல்லுவதன் மூலமே வர்க்கப் போராட்டத்தின் நலனுக்குச் சேவை செய்யப்படுகின்றது." (லெனின்: தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை)

## தணிக்கை

## புரட்சிகர மார்க்சிஸ்டுகளின் பாகம்

பல்வேறு தட்டுக்களைச் சேர்ந்த வர்க்கங்கள் சாதிகள், விவசாயி

கள் ஆகியோர் அபிவிருத்தியடையும் முதலாளித்துவத்தின் வரலாற்றுப் போக்கினுள் அகப்பட்டுள்ளார்கள். அத்தோடு அவர்கள் தமது அரசியல் சுதந்திரத்திற்காகிய போராட்டத்தினுள் ஈர்க்கப்பட்டுள்ளார்கள், இவற்றினால் அவர்கள் தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமையின் கீழான வெகுஜன இயக்கத்தினுள் ஒன்று சேர்ந்துள்ளார்கள்.

பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்க முரண்பாடானது உயர்ந்த முதிர்ச்சி நிலைமையை அடையாத நிலைமையும் வெகுஜனங்கள் ஒடுக்குதலுக்கு எதிராகப் பொங்கி எழுந்துள்ள புரட்சிகர நிலைமையையும் ஒடுக்கப்படுவோரின் முதலாளித்துவ வர்க்கமானது முற்போக்கு தேசிய இயக்கத்திற்குத் தலைமை கொடுக்கும் கட்டத்தையும் ஒருங்கே கொண்டுள்ள தனித்தன்மை வாய்ந்த நிகழ்ச்சிகளின் வரலாற்று ரீதியான இணைப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஒடுக்கும் தேசிய இனத்தினதும், ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களின் பாகம் பிரச்சினைக்கு உரியதாகுகின்றது. திட்டவட்டமாக இந்நிலையிலேயே மார்க்சிஸ்டுகள் லெனினிச மூலஉபாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாகுகின்றார்கள்.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் போராட்டத்தை ஆதரித்து அதன் சுய நிர்ணய உரிமையை. அதாவது அதன் பிரிந்து செல்லும் உரிமையை ஏற்பது ஒவ்வொரு மார்க்சிஸ்டுகளினதும் தலையாயகடமை என்று லெனின் எமக்குக் கூறுகின்றார். ஒடுக்கப்படுவோரின் முதலாளித்துவ வர்க்கமானது போராட்டத்திற்கு தலைமை கொடுக்கும்வரை, அது ஒடுக்குகின்றவர்களை எதிர்த்துப் போராடும்வரை, பாட்டாளி வர்க்கமானது வர்க்கப் போராட்டத்திற்கு உகந்த நிலைமைகளை உண்டுபண்ணுவதற்காக அதற்கு நிபந்தனையான ஆதரவை மட்டுமே வழங்க முடியும்.

என்றாலும் லெனின் தேசிய ஜனநாயகப் போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களைப் பற்றி எம்மை எச்சரிக்கின்றார். முதலாவதாக முதலாளித்துவ வர்க்கமானது 'ஒடுக்குதலுக்கு எதிரான ஜனநாயக உள்ளடக்கங்களைக்கொண்டிருந்த பொழுதும், பிற்போக்கானதும் வகுப்புவாதத் தன்மை கொண்டதுமான முதலாளித்துவ தேசிய வாதத்தை முன் எடுத்துச் செல்ல முயற்சிக்கும். இரண்டாவதாக அது தனது வர்க்க சலுகைகள், நலன்கள் என்பனவற்றைக் காப்பதற்காகப் புரட்சிகர இலட்சியத்திற்குப் பாதகமாகவும், தொழிலாள வர்க்கத்தை ஏமாற்றவும், ஒடுக்கும் முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒத்துழைக்கும் இது சம்பந்தமாக

லெனினின் மேற்கோள் காட்டுவோமாயின்;

“தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளித்துவ வர்க்கமானது தேசிய விடுதலையின் கோஷங்களைப் பாவிக்கும், மேலாதிக்கம் உள்ள முதலாளித்துவ வர்க்கத்துடன் பிற்போக்கு உடன்படிக்கைகளைச் செய்ய இந்தக் கோஷங்களை அவர்கள் தமது உள்நாட்டுக் கொள்கைகளில் பாவிப்பார்கள் . . . . (லெனின்: சோஷலிசப் புரட்சியும் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையும்).

தேசிய சுதந்திரத்தை நாடும் ஒடுக்கப்படும் தேசிய இனம் ஒன்றின் புரட்சிகரமானதும் முற்போக்கானதுமான அபிலாசைகளுக்கு நிவர்த்தி செய்ய முடியாத அழிவை ஒடுக்கும் தேசிய இனத்தினதும், ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் முதலாளித்துவ வர்க்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு ஏற்படுத்தும். இக்கட்டத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளனின் கடமை, இந்த ஒத்துழைப்பை அம்பலப்படுத்துவதும், குலைப்பதுவுமேயாகும்- முதலாளித்துவ வர்க்கமானது அமைப்பு ரீதியில் பலவீனமானது. எனவே அதற்கு இப்படியான ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. தமிழ் தேசியப் போராட்டத்தின் வரலாற்றில் தமிழ் சிங்கள முதலாளித்துவ வர்க்கங்களுக்கு இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் பொறிக்கப்பட்டிருப்பதில் இருந்து இது தெளிவாகுகின்றது.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் புரட்சிகரப் பண்பை முன்னெடுத்துச் செல்லத் தமிழ் முதலாளித்துவ வர்க்கமானது அமைப்பு ரீதியாக பலவீனமானதாகும். எனவே ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் புரட்சிகர மார்க்சிஸ்டுகளின் மூல உபாயமானது, பாட்டாளி வர்க்கத்தின் அபிவிருத்தியை உத்தரவாதம் செய்வதோடு, விவசாயிகளுடனும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்துடனுமான அதன் கூட்டைப் பலப்படுத்துவதாக இருக்க வேண்டும். இதன் மூலம் நகரப்புற, நாட்டுப்புற வெகுஜனங்கள் மத்தியில் பலம்வாய்ந்த அடித்தளத்தைக் கொண்ட புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தலைமையை உண்டுபண்ண முடியும். இப்படியான புரட்சிகரத் தலைமையானது உண்மையான தேசிய விடுதலை இயக்கமாகிக் கொள்ளும். ஏனெனில் அது தேசிய விடுதலைப் பணியை ஆற்ற வேண்டிய சகல முற்போக்கு மற்றும் புரட்சிகர சக்திகளையும் ஐக்கியப்படுத்தும் உள்ளாற்றலைக் கொண்டிருக்கின்றது.

இப்பத்திரத்தின் நோக்கெல்லையுள் ஈழத் தேசிய இனத்தில் உள்ள புரட்சியாளர்கள் கடைப்பிடிக்க இருக்கும் புரட்சிகர மூல

உபாயங்கள், செயற்பாட்டிற்கான நடைமுறை வேலைத் திட்டங்கள் என்பனவற்றை விபரமாக ஆய இடமில்லை. ஆனால் இருக்கின்ற பணிகள் இரண்டு என்று இங்கு கூறுவது போதுமானதாகும். அதாவது இப்பணிகள் தான் தேசிய விடுதலையும் சோஷலிச நிர்மாணமுமாகும்.

தமிழ் தேசிய விடுதலை இயக்கமானது இவை இரண்டையும் ஒன்றுடன் ஒன்று உறவு படுத்தி முன் எடுத்துச் செல்ல வேண்டும். ஒடுக்குபவனின் அரச சாதனங்களைக் கவிழ்க்க இயக்க ரீதியாக அணி அமைக்கும் அதே நேரத்தில் புரட்சிகர செயற்பாங்கை உண்டுபண்ணி காலவதியடைந்த சமூக அமைப்பைக் கவிழ்த்துப் புதிய சோஷலிச அமைப்பை நிர்மாணிக்க வேண்டும்.

இந்தப் புரட்சிகர மூல உபாயமானது நாம் இருக்கும் வரலாற்று ரீதியான நிலைமைகளுள் நிலைநிறுத்தப்பட்டு விபரமாக வகுக்கப்பட வேண்டும். எமது தேசிய போராட்டத்தை ஒரு போராட்ட முறையினுள் கட்டுப்படுத்திவைக்க வேண்டிய தேவை இல்லை. லெனின் சரியாகக் குறிப்பிட்டது போலப் புதிய மூல உபாயங்களைப் புரட்சிகர விஞ்ஞானமும், புரட்சிகர ஆய்வுகளும் எமக்குத் தருகின்றன. லெனின் கூறுகின்றார்:

"குறிப்பிட்ட ஒரு கணத்தில் இருப்பதும், அக் கணத்தில் சாத்தியமானதாக இருக்கும் போராட்ட வடிவங்களுக்கும் மார்க்சிசமானது தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாது. ஏனெனில் அது தரப்பட்டுள்ள சமூக நிலை மாறும் பொழுது புதிய போராட்ட வடிவங்கள் அதாவது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் போராட்டத்தில் பங்கு கொள்ளுபவர்களுக்குத் தெரியாத போராட்ட வடிவங்கள் தோன்ற முடியும் என்று ஏற்கின்றது. (லெனினின் நூல் திரட்டு, -2- பக்கம் 213).

## கார்ல் மார்க்ஸ்

மார்க்ஸ் அயர்லாந்தின் தேசிய இயக்கத்தை ஆதரித்தார். அவர் ஆங்கிலத் தொழிலாள வர்க்கத்தை அயர்லாந்தின் சுதந்திரத்திற்காகப் போராடும்படி அறை கூவினார். அயர்லாந்தை அவர் இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்ட ஒடுக்கப்படும் காலனியாகக் கருதினார். ஆங்கிலத் தொழிலாள வர்க்கத்தின் விடுதலைக்கு, அயர்லாந்தின் விடுதலையானது தேவையானதும், அத்தியாவசியமானதும் என மார்க்ஸ் கருதினார். மற்றொரு நாட்டிற்கு எதிரான எந்த ஒரு தேசிய இனமானதும் தனது ஒடுக்குதலைக் கடைப்பிடிக்குமாயின், அது சுதந்திரமாக இருக்க முடியாது என்று அவர் வலியுறுத்துகின்றார்.

தேசியப் பிரச்சினை சம்பந்த

மாக மார்க்சினதும், லெனினதும் படைப்புக்கள் ஒரு முக்கிய உண்மையைப் புகட்டுகின்றன. அதாவது தேசிய ஒடுக்குதலானது, ஒடுக்கும் தேசிய இனத்தைப் பிரிக்கும் என்பதாகும். ஒடுக்குதல், மேலாதிக்கம் என்பன மூலமாக வருப்புவாதச் சித்தாந்தத்தைக் கொண்டே ஆளும் முதலாளித்துவ வர்க்கமானது தனது மேலாதிக்கத்தையும், ஆட்சியதிகாரப் பலத்தையும் ஒடுக்கும் தேசிய இனத்தின் உழைக்கும் வெகுஜனங்களின் மேல் செலுத்துகின்றது. மார்க்ஸ் எழுதுகின்றார்:

"ஆங்கிலத் தொழிலாளர்கள் இயக்க ரீதியாக அணிதிரண்டிருந்த பொழுதும், பிரித்தானியா அயர்லாந்தை அடக்குவதே அவர்களின் தளர்ந்த நிலையின் இரகசியமாகும். முதலாளித்துவ வர்க்கம் தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் தன்னைப் பேணிக்கொண்டிருப்பதன் இரகசியமும் இதுவேயாகும். (மேயருக்கும், வோக்கிற்கும் மார்க்ஸ் ஏப்பிரல் 9, 1870ல் எழுதிய கடிதம்)

தேசியப் பிரச்சினை சம்பந்தமாக லெனின் மார்க்சைத் தனது வழிகாட்டியாகக் கொண்டார். லெனின் எழுதுகின்றார்:

"எமது முன்மாதிரி எப்பொழுதும் மார்க்ஸ் பல தசாப்தங்களாகப் பிரித்தானியாவில் வாழ்ந்து அரை ஆங்கிலேயராக மாறிய பின், பிரித்தானிய தொழிலாளர்களின் சோஷலிச இயக்கத்தின் நலனின் பேரில் அவர் அயர்லாந்திற்கு விடுதலையையும், தேசிய சுதந்திரத்தையும் கோரினார். (லெனின்: பேரினை ரஷ்யர்களின் தற்பெருமை பற்றி)

ஒடுக்கும் தேசிய இனத்தின் (இதில் சிங்களத் தேசிய இனத்தின்) முற்போக்குவாதிகளும், புரட்சியாளர்களும், மார்க்சிசத்தினதும், லெனினிசத்தினதும் பாட்டாளி வர்க்க நடைமுறையை கடைப்பிடிக்கின்றவர்களும் இந்த மகத்தான ஆசிரியர்கள் முன் வைத்த மூல உபாயத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நாம் வாதிடுகின்றோம். அவர்கள் இதன்படி நிபந்தனையற்றதும், சரியானதுமான ஆதரவை ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு அளிக்க வேண்டும்.

## புரட்சிகர நண்பன்

அத்தகைய ஒரு அரசியல் மூலோபாயமானது ஒடுக்கும் தேசிய இனத்தினதும், ஒடுக்கப்படும்

தேசிய இனத்தினதும் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்குச் சேவை செய்யும், ஏனெனில் ஆளும் சிங்கள முதலாளித்துவ வர்க்கமானது இனவாதச் சித்தாந்தத்தைப் பலப்படுத்திக் கொண்டு, இலங்கைத் தொழிலாள வர்க்க இயக்கத்தைப் பிளவுபடச் செய்து பலவீனப்படுத்தும் இலக்கில் படுகொடூரமான தேசிய ஒடுக்கு முறையை நடைமுறைப்படுத்திவருகின்றது. இந்த முதலாளித்துவ சித்தாந்தத்தை உடைத்தெறிந்து ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளிகளை ஐக்கியப்படுத்தி வடக்கு தெற்கில் உள்ள புரட்சிகர மார்க்சிஸ்டுகள் பிரிந்து செல்ல ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்திற்குள்ள உரிமையை திடகாத்திரமாக ஆதரிப்பதன் மூலம் இச்சித்தாந்தத்திற்கு எதிர்த்தாக்குதலை தொடுக்க வேண்டும்.

இப்படியான மூல உபாயமானது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமையைப் பற்றி வெகுஜனங்கள் பிரமாண்டமான ரீதியில் அரசியல் கல்வி ஊட்டப்பட வேண்டிய தேவையை ஏற்படுத்துகின்றது. லெனின் கூறியது போல, "தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை மிகவும் [illegible]சங்கப் டமாகவும், ஊசலாடாமலும், அஞ்சாமலும் புரட்சிகர முறையிலும் ஆதரிக்க வெகுஜனங்கள் மிகவும் திட்டமிட்ட முறையில் கல்வியூட்டப்பட வேண்டும்".

சோஷலிசப் புரட்சிக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள், வெகுஜன இயக்கங்களின் புரட்சிகர மறை ஆற்றலை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இப்போராட்டத்திற்காகிய புறநிலை ரீதியானதும், அக நிலை ரீதியானதுமான நிலைமைகளை முழுமையாகக் கிரகித்துக் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் சிங்கள முற்போக்காளர்கள் தமது அரசியல் வேலைத் திட்டத்தை வகுக்காது விடுவார்களாயின் அவர்கள் சிங்களத் தேசிய இனத்தின் வர்க்கப் போராட்டத்தின் முன்னேற்றத்தைப் பெருமளவு குலைப்பவர்களாக மாறுவார்கள்.

## வரலாற்று உண்மை

வரலாற்று ரீதியான இந்த நிலைமையில் மிகவும் முக்கியமான சரித்திர உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் விடுதலை மட்

டுமே ஒடுக்கும் தேசிய இனத்தின் உழைக்கும் வெகுஜனங்கள் தம்மை முதலாளித்துவ வகுப்புவாதத்தின் தளைகளில் இருந்து விடுவிக்கவும், முதலாளித்துவ அரச ஆட்சியதிகாரத்திற்கு எதிராகத் தம்மை அணிதிரட்டிக் கொள்ளவும் ஏதுவாகும்.

எனவே நாம் இலங்கையின் புரட்சிகர இயக்கங்களைப் பார்த்து ஒடுக்கப்படும் தமிழ் வெகுஜனங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு முழு ஆதரவையும் அளிக்கும்படி அறை கூவுகின்றோம். அதே நேரத்தில் அவர்களை ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் புரட்சிகர மார்க்சிஸ்டுகளுக்கு, அவர்கள் பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் உண்மையான தேசிய விடுதலை இயக்கத்தைக் கட்டி எழுப்ப ஒத்துழைக்கும்படி வேண்டுகின்றோம். விடுதலை செய்யப்பட்ட சோஷலிச ஈழமானது, சிங்கள வெகுஜனங்கள் தமது முதலாளித்துவ அரச அமைப்பை அழித்து நிச சோஷலிச சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதில் அவர்களது புரட்சிகர நண்பனாக விளங்கும்.

# தொழிலாளர் பாதை

## சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட தொழிலாளர் பாதை சந்தா:

| | |
|---|---|
| 1 வருடம் —ரூ 23.50 | 3 மாதம் — ரூ 6.00 |
| 6 மாதம் —ரூ 11.75 | 1 மாதம் — ரூ 2.00 |

பெயர்: ..............................................................

முகவரி: ..............................................................

சந்தாக் காலம்: ............................ ரூ | சதம்

சந்தாப் பணத்திற்கான அஞ்சல் அல்லது காசுக்கட்டளை யுடன், நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பிவைக்கவேண்டிய முகவரி: நிர்வாகி, தொழிலாளர் பாதை,
121, மாளிகாகந்தை வீதி, கொழும்பு-10.



# புரட்சிக் கம்யூனிஸ்ட்

## கழகத்திற் சேருங்கள்!

பெயர்:
தொழில்:
முகவரி:
மாவட்டம்:

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும்
நிரப்பிய இப் பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
121, மாளிகாகந்தை வீதி, கொழும்பு-10.

விலை 2-50